விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 21 புதன்கிழமை (07.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 292

# அரசின் மீள் குடியேற்ற நடவடிக்கை திருப்தி அளிக்கும் வகையில் இல்லை!

## பிரித்தானியா குற்றச்சாட்டு



(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெறவில்லை. அகதிகளை மீள் குடியேற்றுவதற்காக பிரித்தானியா வழங்கிய உதவிகள் சரியான முறையில் பயன் படுத்தப்படவில்லை என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அந்நாட்டு அபிவிருத்தி துணை அமைச்சர் மைக் பொஸ்டர் தெரிவித்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படாது

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 2010 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படாது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்குப் பதிலான இடைக்கால கணக்கு அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய நேற்று இரவு தெரிவித்துள்ளார். நேற்று மாலை கூடிய விசேட அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் குறிப் பிட்டார்.

(ச-5)

## கூட்டமைப்பின் 4 எம்.பிக்களுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நான்கு பேர் வெளிநாடுகளில் வைத்து பொங்குதமிழ் நிகழ்வுகளில் ஆற்றிய உரை தொடர்பில் அவர்களுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை விசாரணை செய்வதற்கு நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆட்சேபனை முன்வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயானந்தமூர்த்தி, அரியநேந்திரன், கஜேந்திரன், சிவாஜிலிங்கம் ஆகிய நான்கு பேருக்கும் எதிராக இந்த வழக்கு தொடரப்பட்டு இருந்தது.

கொழும்பு பிரதம நீதவான் நிசாந்த ஹப்பு ஆராச்சி முன்னிலையில் இந்த வழக்கு நேற்று அழைக்கப்பட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## முகாம்களுக்கான உதவிகளை நிறுத்துவதாக பிரிட்டன் அறிவிப்பு

(கொழும்பு)

சுமார் இரண்டரை இலட்சம் இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு அவசர உதவிகளை தவிர ஏனைய அனைத்து உதவிகளையும் நிறுத்தப் போவதாக பிரிட்டிஷ் அரசாங்கம் கூறியுள்ளது.

அங்கிருக்கின்ற மிகப்பெரிய முகாமுக்கு பிரிட்டிஷ் அமைச்சர் மைக் பொஸ்டர் அவர்கள் விஜயம் செய்து திரும்பியதை அடுத்து இந்த அறிவிப்பு வந்துள்ளது.

அதே நேரம் பருவ மழைக்காலத்தில் அங்கு ஏற்படக்கூடிய எந்தவிதமான வெள்ளமும் வடிந்தோடும் வகையில் தேவையானவடிகால் வசதிகளை தாம் முகாம்களில் அமைப்பதாக இலங்கை அரசாங்கம் கூறுகின்றது.

ஆனால் அதனுடன் பிரிட்டனும், ஐ.நாவும் உடன்படவில்லை. மெனிக்பாம் முகாமுக்கு விஜயம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அரசுக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு

### விசாரணை நடத்த ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை மீது அமெரிக்கா தெரிவித்த மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அமெரிக்கா மீது உடனடியாக மனித உரிமை மீறல் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் நேற்று பொதுமக்களிடம் கையெழுத்து பெறும் கையெழுத்து வேட்டை யொன்று இடம்பெற்றது.

ஜாதிக ஹெல உறுமயவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கையெழுத்து வேட்டை பண்டாரநாயக்க

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க வேட்பாளர் மீது தாக்குதல்

(கொழும்பு)

தென் மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியகட்சி வேட்பாளர் ஒருவர் நேற்றுக் காலை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டு தாக்கப்பட்ட நிலையில் மாத்தறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை மாத்தறையில் இடம் பெற்ற இந்த சம்பவம் குறித்து கட்சியின் பொது செயலாளர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 'எங்களை இங்கிருந்து மீட்டு விடுங்கள்' பிரி. அமைச்சரிடம் முகாம் மக்கள் கதறல்

### சிறிய கூடாரத்துக்குள் 24 பேர் வாழும் பரிதாபம்

(வவுனியா)

நீர், உணவு, மருத்துவம், கல்வி மற்றும் இடப் பற்றாக்குறை என எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற இந்த முகாமிலிருந்து எங்களை மீட்டு விடுங்கள் என வவுனியா நலன்புரி முகாம்களில் உள்ள மக்கள் பிரித்தானிய மேம்பாட்டுத்துறை அமைச்சர் மைக் பொஸ்டரிடம் கோரிக்கைவிடுத் துள்ளனர்.

எமக்கு எந்த விதமான உதவியையும் அரசு செய்யாவிட்டாலும் பரவாயில்லை. எங்களை எங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதித்தால் போதும். சுயதொழில் செய்து நாம் பிழைத்துக் கொள்வோம். நீர், உணவு, மருத்துவம், கல்வி, இடப்பற்றாக்குறை என எந்தவித அடிப்படை வசதிகளுமற்ற முகாம்களிலிருந்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய அமைச்சர் இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

போருக்கு பின்னரான நிலைமைகளைப் பார்வையிடுவதற்காக பிரித்தானிய அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் மைக்பொஸ்டர் இரண்டு நாள் பயணமாக நேற்று கொழும்பை வந்தடைந்தார். வன்னியில் தடுப்பு முகாம்களுக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் நிலைமைகளையும் இந்தபயணத்தின் போது அவர் நேரில் சென்று அவதானித்தார்.

இலங்கையில் (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் உள்ள 142 லொறிகள் ஏ-9 ஊடாக சேவையில் ஈடுபட அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள 142 லொறிகள் ஏ-9 பாதையூடான சேவையில் ஈடுபட அனுமதி கிடைத்துள்ளதாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;

யாழ். மாவட்டத்திற்கு ஏ-9 பாதை யூடாக தென் இலங்கையிலிருந்து பொருட்களை ஏற்றிவர 200ற்கும் மேற்பட்ட லொறிகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவற்றை ஏ-9 வீதியூடான சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட வேண்டுமென பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டிருந்தேன். இதில் முதற்கட்டமாக 142 லொறிகளை சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த லொறிகளுக்கான தகைமைச் சான்றிதழை யாழ். கட்டளைத்தளபதி பெற்றுக்கொடுப்பார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சமகால தகவல் தொழில்நுட்ப நூல் வெளியீடும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி கணனி மாணவர் ஒன்றிய அனுசரணையுடன் நடைபெறும் சமகால தகவல் தொழில்நுட்ப நூல் வெளியீடும் கருத்தரங்கும் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் கல்லூரி அதிபர் ந.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முகாமைக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி க.தேவராஜா, ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் வி.அருளானந்தம், யாழ்.பல்கலைக்கழக கணனியியற் துறைத் தலைவர் கலாநிதி ஏ.சாள்ஸ், உயர் தொழில்நுட்பவியல் நிறுவன இயக்குநர் கலாநிதி என்.சகாஜன் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரை, ஆய்வுரையினை என்.அம்பிகைபாகனும் கருத்தரங்கினை த.தவரூபனும் நிகழ்த்தவுள்ளனர். (ச-14)

# புலமைப் பரீட்சை முடிவுகளில் ஊர்ப் பாடசாலைகள் சாதனை

## ★ கல்விப் பணிப்பாளர் புகழாரம் ★

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த புலமைப்பரீட்சை முடிவுகளில் ஊர்ப் பாடசாலைகள் சாதனை படைத்துள்ளதாக யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் புகழாரம் சூட்டியுள்ளார்.

யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செயல்வழி ஆய்வு பற்றிய கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பின்தங்கிய பாடசாலைகள் என்ற நிலையில் இருந்து விலகி தங்களால் சாதனை படைக்க முடியும் என்பதை ஊர்ப் பாடசாலைகள் நிரூபித்துள்ளன. அந்த பாடசாலைகள் படைத்த சாதனைகளை வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன்.

புலமைப்பரீட்சையில் சித்தி அடைவதென்ற நிலைக்கு அப்பால் ஆகக்குறைந்தது 100 புள்ளிகளையாவது ஒவ்வொரு மாணவரும் பெற்றுக்கொள்ளும் தகுதி நிலையை ஏற்படுத்துவது அதிபர்கள், ஆசிரியர்களின் தலையாய கடமையாகும்.

நகரமையப் பாடசாலைகள் என்ற கவர்ச்சி நிலையைத் தவிர்த்து பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சாதனை படைத்து வரும் ஊர் பாடசாலைகளில் சேர்ப்பதும் அந்த பாடசாலைகளின் வளர்ச்சிக்கு பாடுபடுவதும் அவசியம் ஆகும்.



இதன் மூலமாகவே சமத்துவமான கல்வி முன்னேற்றத்திலும் மாணவர்களின் ஆளுமைப் பண்புகளிலும் விருத்தியை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ந)

# இரவு நேரத்தில் பயணித்த குடும்பஸ்தரை வழிமறித்து தாக்கி தங்க நகைகள் அபகரிப்பு

## நல்லூரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இரவு நேரத்தில் வீதியால் சென்ற குடும்பஸ்தர் ஒருவரை கொள்ளையர் குழுவொன்று வழிமறித்துத் தாக்கியுள்ளதுடன் அவர் அணிந்திருந்த தங்கநகை மற்றும் துவிச்சக்கரவண்டி என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. தியாகி அறக்கொடை நிலையத்தில் பணியாற்றும் கட்டப்பிராயைச் சேர்ந்த செ.பத்மநாதன் (வயது 34)என்பவரே தாக்குதலுக்கு இலக்கானவராவார்.

இவர் தனது பணியை முடித்துக் கொண்டு சக ஊழியரை நல்லூரிலுள்ள அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்ற போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நான்கு பேர் கொண்ட குழுவொன்று இவரை வழிமறித்து அருகிலுள்ள பாழ்ங்கிணறு ஒன்றுக்கருகே அழைத்துச் சென்று தாக்கியதுடன் அவர் அணிந்திருந்த 2பவுண் பெறுமதியான மோதிரத்தையும் அவர் சென்ற புதிய துவிச்சக்கரவண்டியையும் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

காயத்திற்கு இலக்கான பிரஸ்தாப நபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். இது குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-30)

# வடமராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட நடமாடும் சேவை நேற்று நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் வடமராட்சிப் பிரதேசத்தின் கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களுக்கும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான நடமாடும் சேவையும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நடமாடும் சேவையில் கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 54 புதிய விண்ணப்பங்களும் திருத்தத்துக்கான 16 விண்ணப்பங்களும் பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 64 புதிய விண்ணப்பங்களும் திருத்தத்திற்கான 6 விண்ணப்பங்களும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட 2 புதிய விண்ணப்பங்களும் 3 திருத்தங்களுக்கான விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. அத்துடன் பிரஜாவுரிமை சம்பந்தமான இரு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டன.

உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிச் செயலமர்வில் பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், கிராமசேவை அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இச் செயலமர்வில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் பி.பி.அபயக்கோன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், உதவிக் கட்டுப்பாட்டாளர் நாயகம் எஸ்.எஸ்.கெட்டியாராட்சி, உதவிக் கட்டுப்பாட்டாளர் எஸ்.எல்.நசீர் மற்றும் ரணசிங்க ஆகியோருடன் பயிற்சி முகாமையாளர், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ச)

## மேலும் 591 பேர் நேற்று யாழ்.வந்தனர்

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த தீவகத்தைச் சேர்ந்த 591 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டு வேலணை, காரைநகர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இம் மக்கள் இன்று அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து நாளையும் தீவகத்தைச் சேர்ந்த 600 பேர் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்படுவார்கள் எனவும் தெரிவித்த யாழ்.அரச அதிபர் அதனுடன் தீவகத்தைச் சொந்த இடமாகக் கொண்ட மக்களை அழைத்துவரும் பணி நிறைவடையும் எனவும் கூறினார். (ச-5)

# முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பகுதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்துவதற்கு யாழ்.மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக் யாழ்.மாநகர சபையின் உறுப்பினர் பி.ஏ.எஸ்.சுப்யான் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வேலைத் திட்டத்தின் கீழ் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுயாழ்.நகர் ஒளிமயமாக்கப்பட்டுவருகின்றது.

இந் நிலையில் யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பகுதிகள் தற்போது இருளில் மூழ்கிக் கிடப்பதை யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, யாழ்.மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பகுதிகளிலுள்ள மின் கம்பங்களுக்கு மின்சார விளக்குகள் விரைவில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களின் பற்றாக்குறை இருப்பதனால் உடனடியாக நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத நிலையிலிருப்பதனால் இன்னும் சில நாள்களுக்குள் யாழ்.முஸ்லிம் வட்டாரம் ஒளிமயமாக்கப்படும் என சுப்யான் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலக பிரிவின் சர்வதேச முதியோர் மற்றும் ஆற்றலுள்ளோர் தினவிழா நாளை காலை 10 மணிக்கு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினர்களாக விவசாய விரிவாக்கல் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் சி.சிவகுமார், அச்செழு 511-வது படையணி பிரிகேட் கொமாண்டர் கேணல் டி.சி.கே.சொஸ்தா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)



வன்னியிலிருந்து நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்ட மக்கள் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களில் ஒரு தொகுதியினர் மர நிழல்களில் தமது பொருள்களுடன் தங்கியிருப்பதைப் படங்களில் காணலாம்.


தேவை

தேங்காய்ச் சிரட்டை தேவை. நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புக்கு: 0773717369

(3741)

MIS கணனிக்கல்வி நிறுவனம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
LAMP/WAMP Satcks
Future Generation for us
Linux , Apache , PHP & MySQL
FOSS Study Centre
Mr.R.Kumaran - B.Sc. (Computing & IS)
இராமநாதன் வீதியிலிருந்து 150m தூரம் அல்லது K.K.S வீதியிலிருந்து 200m தூரம்
# 74, சபாபதி வீதி தலையாழி பிரம்படி யாழ்ப்பாணம்
TPNO :- 0213216083 , 0776577359

## இன்று ஒரு தகவல்

# தாவும் மனிதர்கள்

உண்மையும் நேர்மையும் தான் வாழ்க்கையில் உண்மையான உயர்வு பெறுவதற்கான வழிகள். அதை விட்டு விட்டு உட்கார்ந்த இடத்திலிருந்து கொண்டே, 'உயரத்திற்குப் போக வேண்டும்' என்று வீணான கற்பனைகளில் ஈடுபடக்கூடாது.

இரண்டாவதாக 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற உண்மையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நாம் வாழ வேண்டும். நாம் எந்தத் தொழிலைச் செய்தாலும், நாம் அதன் பெருமையை உணர்ந்து பாடுபட வேண்டும்.

அதைவிட்டுவிட்டு 'இது என்ன பிழைப்பு சேர்? இந்தத் தொழிலை மனுஷன் செய்வானா?' என்றெல்லாம் சொல்லிக் கொண்டு, அந்தத் தொழிலையே செய்து கொண்டிருப்பவர்கள் பலபேர் உண்டு. இந்தக் கருத்துக்குப் பொருத்தமான கதை ஒன்றைப் பார்ப்போம்.

மலையடிவாரத்தில் நின்று சிற்பி ஒருவன் சிலை வடித்துக் கொண்டிருந்தான். கையில் ஒரு சிறிய உளியை வைத்துக் கொண்டு பெரிய கருங்கல் பாறையை உடைத்துக் கொண்டிருந்தான்.

சிற்பம் செய்வது என்பது எப்படிப்பட்ட உயர்ந்த தொழில்... எல்லோராலும் அது முடியுமா? அப்படியிருந்தும் அந்தச் சிற்பிக்கு மனநிறைவு ஏற்படவில்லை. வெயிலில் உட்கார்ந்து வேலை செய்வது அவனுக்குக் கஷ்டமாக இருந்தது.

'சிற்பியாக நாம் இருப்பதால் தானே சூரியன் கடுமையான வெயிலை நம்மீது வீசுகிறான்? நாமே அந்தச் சூரியனாக இருந்து விட்டால் நமக்கு இந்தக் கஷ்டம் இருக்காதே! நம்மைக் கஷ்டப்படுத்துபவன் நம்மைவிட வலிமை உள்ளவன். அதனால் நாம் அவனாகவே மாறிவிடுவது நல்லது'' என்று நினைத்தான் சிற்பி. உடனே அவனது எண்ணம் நிறைவேறியது.

இயற்கை அந்தச் சிற்பியை ஒரு சூரியனாக மாற்றி விட்டது. சிற்பி இப்போது சூரியனாக மாறிவிட்டான்.

"இனிமேல் இந்த உலகத்தில் நம்மைவிட வலிமையுள்ளவன் வேறு யாரும் இல்லை'' என்று நினைத்தான்.

இந்த நேரத்தில் கரிய மேகங்கள் அந்தப் பக்கமாக நகர்ந்து வந்தன. அவை சூரியனை மறைத்துக் கொண்டன.

"என்ன இது? என்னையே இந்த மேகம் மறைக்கிறதென்றால், இது என்னைவிடப் பெரிய ஆளாகத்தான் இருக்கவேண்டும். எனவே இனி நாம் சூரியனாக இருக்க வேண்டாம். மேகமாகத்தான் இருக்க வேண்டும்'' என்று நினைத்தான்.

உடனே இயற்கை அவனை மேகமாக மாற்றிவிட்டது.

இப்போது மேகமாக மாறிய அவன் வானவீதியில் உலா வந்து கொண்டிருந்தான். எதிரில் பெரிய பெரிய மலைகள் மேகம் செல்லும் வழியை அடைத்துக் கொண்டிருந்தன.

அதனால் மலையைத் தாண்டிச் செல்ல முடியவில்லை. "நாம் எந்தத் தடையுமில்லாமல் அந்தரத்தில் மிதந்து வருகிறோம். நம்மையே போகவிடாமல் இந்த மலை தடுக்கிறதென்றால் அதற்கு எப்படிப்பட்ட வலிமை இருக்க வேண்டும். இனிமேல் நாம் மேகமாயிருந்து பயனில்லை. மலையாகத்தான் இருக்க வேண்டும்'' என்று நினைத்தான்.

உடனே வேகமாக இருந்த சிற்பி மலையாக மாறி விட்டான். "இனிமேல் எந்தக் கஷ்டமும் இல்லை'' என்று மலை நினைத்தது.


இப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போது கீழே ஏதோ ஒரு சத்தம் கேட்டது. கீழே குனிந்து பார்த்தால் சிற்பி ஒருவன் உட்கார்ந்து சிலை வடித்துக் கொண்டிருந்தான். இப்போது அந்த மலை சிந்தித்தது: "மலையையே ஒருவன் உடைக்கிறான் என்றால் அவன் எப்படிப்பட்ட வலிமை உடையவனாக இருக்க வேண்டும்? இனிமேல் நாம் மலையாயிருந்து பிரயோசனமில்லை, மனிதனாக மாற வேண்டும்'' என்று மலை நினைத்தது.

உடனே மலை மனிதனாக மாறியது. மறுபடியும் ஓர் உளியை வைத்துக் கொண்டு அந்த சிற்பி பாறையை செதுக்கிக் கொண்டிருந்தான்.

இந்தக் கதையிலிருந்து என்ன தெரிகிறது?

"தன்னுடைய உண்மையான பலம் என்னவென்பது தெரியாமலே மனிதன் தாவித் தாவி தடுமாறிக் கொண்டிருக்கிறார்'' என்பதுதான். இந்த உண்மையை இனிமேலாவது நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*



மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா. வித்தியாலயத்தில் 38 வருட ஆசிரிய சேவையை பூர்த்தி செய்த உப அதிபர் திருமதி மைதிலி இராசநாயகத்தின் பணிநயப்பு விழாவின் போது வித்தியாலய ஆசிரியர்கள் சார்பில் உப அதிபர் க. சிவனருட்சோதி பதக்கம் அணிவிப்பதையும் ஆசிரியை திருமதி சி. இராஜேஸ்வரி வாழ்த்து மடலை வழங்குவதையும் படங்களில் காணலாம்

# யாழ். மாவட்டத்தில் 57 ஆவது கூட்டுறவு நகர் மண்டைதீவில் திறந்து வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மண்டைதீவு சிறப்புக் கூட்டுறவு நகரைச் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்துள்ளார்.

கடந்த வேலணைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ. சிவநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டுறவு நகர் திறப்பு வைபவத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரை நிகழ்த்தும் போது பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகித்து வருவதுடன் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இத்தகைய சிறப்புக் கூட்டுறவு நகர்களையும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அமைத்து வருவது பாராட்டுக்குரியது எனத் தெரிவித்தார்.

மண்டைதீவு தமக்குப் புதிய இடமல்ல என்றும், ஏற்கனவே 25 வருடங்களுக்கு முன்னர் பரீட்சமான இடமாக இருந்த போதிலும் தற்போது பார்க்கும் போது பல்வேறு வித்தியாசங்களை அவதானிக்க முடிவதாகவும் கடந்த கால யுத்தத்தின் அழிவுகளில் இருந்து விடுபட்டு மீண்டும் எமது சேதத்தைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புத் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மண்டைதீவு மக்கள் அனைவரும் ஓரணியில் திரள்வதன் மூலம் குறுகிய காலத்தில் இப்பிரதேசத்தையும் மீளக் கட்டியெழுப்ப முடியும் என்றும் தெரிவித்தார்.

இன்று நிறுவப்பட்டுள்ள சிறப்புக் கூட்டுறவு நகருக்கு மேலும் உதவிகளை வழங்கி அதனைப் பலப்படுத்துவதற்கு எண்ணியுள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பகுதி மக்களின் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளைப் பரிசீலித்து அவற்றைப் படிப்படியாகத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலாளர் மு. நந்தகோபாலன், ஈ.பி.டி.பி.யின் தீவுப்பகுதி அமைப்பாளர் சின்னையா சிவராசா போல் சமாதான நீதவான் அ. ஸ்ரீபத்மராசா உட்படப் பலர் உரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கதாகும். ஓ

## இராசி பலன்

*07.10.2009*
*(புரட்டாதி 21 புதன்கிழமை)*
*திருதியை முற்பகல் 10.40 மணிவரை*
*பரணி பிற்பகல் 12.27 மணிவரை*
*இராகுகாலம் 12.02-1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32-6.02 மணிவரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம், கார்த்திகை விரதம்*
*சித்தாமிர்தம்*

| | |
|---|---|
| மேடம் | பாராட்டு, நல்ல முயற்சி, போசன சுகம், தேகநலன். |
| இடபம் | காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு, வீண் மனஸ்தாபம், சுபசெலவு. |
| மிதுனம் | எடுத்த காரியம் கைகூடும், பெருமையடைதல், அந்நியர் சந்திப்பு, தனலாபம். |
| கடகம் | அதிகாரம், தன்னம்பிக்கை, முயற்சி கைகூடும், நல்ல தகவல். |
| சிங்கம் | புதிய திட்டமிடல், திடீர் பயணம், எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம். |
| கன்னி | உஷ்ண வியாதி, எதிர்பாராத பகை, முயற்சி தாமதம், போசன சுகம். |
| துலாம் | களஸ்திர நன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், தேகநலன். |
| விருச்சிகம் | நண்பர்கள் சந்திப்பு, நல்ல செய்தி, காரிய நன்மை, போசன சுகம். |
| தனுசு | புத்திரரால் கவலை, போசன சுகக்குறைவு, ரோகபயம், தொழில் சிந்தை. |
| மகரம் | திடீர் பயணம், சுபசெலவு, தன விரயம், நண்பர்கள் சந்திப்பு. |
| கும்பம் | வாக்கு மேன்மை, பொருள் சேர்க்கை, காரிய நன்மை, பிரயாண சுகம். |
| மீனம் | வீண் மனஸ்தாபம், முயற்சி தாமதம், தனவிரயம், போசன சுகம். |

வளவன்

## இடம்பெயர்ந்த க.பொ.த (சா/த) பரீட்சார்த்திகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 2009 டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள தோற்ற விரும்பும் நலன்புரி நிலையங்கள், நிவாரண கிராமங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த பரீட்சார்த்திகள் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 4.00 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்திற்கு சமூகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். ஓ

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 85 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 40 |
| தக்காளி | 30 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 85 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 30 | 40 | 20 |
| புடோல் | 35 | 45 | 35 |
| வாழைக்காய் | 30 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 45 | 55 | 45 |
| பெரிய வெங்காயம் | 40 | 50 | 50 |
| பாகற்காய் | 120 | 140 | 60 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 45 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 70 | 40 |
| லீக்ஸ் | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 40 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 150 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 250 | 260 | 260 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35 |

# வடமாகாண கல்வி அமைச்சின் தமிழ் இலக்கிய விழா -2009

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வியமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் தமிழ் இலக்கியவிழா -2009 நாளை வியாழக்கிழமை முதல் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆரம்பநாள் வியாழன் காலை *ஈழத்துத் தமிழ் இலக்கிய யாழ்ப்பாணத்து தமிழ் மன்னர் காலம்* எனும் கருப்பொருளில் ஏழு ஆய்வாளர்கள் ஆய்வரங்கு நிகழ்த்தி ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கவுள்ளனர்.

தொடர்ந்து முதலாம் நாள் நிகழ்வான தா. இராமலிங்கம் அரங்கு பி.ப 2.30 மணிக்கு வடமாகாண பண்பாட்டலுவல்கள் உதவிப் பணிப்பாளர் திருமதி . என் ஸ்ரீ தேவி தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள் ளதுடன் கௌரவ விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் கே. கணேஷ் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு துறை செயலாளர் இ. இளங்கோவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இவ்விழாவில் நடனம், இசை நாடகம், நட்டுக்கூத்துபோன்ற பல கலை நிகழ்வுகள் மாலை 6.30மணிவரை இடம் பெறவுள்ளது. இரண்டாம் நாள் நிகழ்வான சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கு வெள்ளிக்கிழமை பி. ப 2.30 மணிக்கு யாழ். அரச அதிபர் தலைமையில் நடை பெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளர் வி. இராசையா கலந்து கொள்ள வுள்ளார்.

தொடர்ந்து இசைக் கச்சேரி நடனம் நாட்டுக் கூத்து என பல கலை நிகழ்வுகள் இரவு 7.40 மணிவரை இடம்பெறவுள்ளது.

இவ்விழாவின் இறுதி நாள்நிகழ்வுகளான செ. இராசநாயகம் முதலியார் அரங்கு சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறைசெயலாளர் இ. இளங்கோவன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண கௌரவ ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ சந்திரசிறி கலந்து சிறப்பிக்கவுள்ளார். கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி யாழ் .அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் கௌரவ ஆளுமை விருது ( 2008 , 2009 ) வழங்கல்மற்றும் சிறந்த நூல் தேர்வுக்கான பரிசு (2007 ,2008 நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும்இடம் பெறவுள்ளன.

இவ்விழாவில் விருது பெறுவோரை பி. ப 1 மணிக்குகல்லூரிக்கு வருகைதருமாறும் தொடர்ந்து மூன்று நாள் நிகழ்வுகளிலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ம் விழா ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக் கொள்கின்றனர். (ஓ)

## ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ். கல்வி வலய ஆசிரியர்களிடையே நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனை அடிப்படையிலான வடக்கின் வசந்தம் துரித கல்வி முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ். கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களிடையே நடாத்தப்பட்ட ஓவிய, குறுநாடக ஆற்றுகை, சிறுகதை, கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு,

**ஓவியப் போட்டி**

சவுந்தி தர்மதாஸ் (யாழ். மத்திய கல்லூரி), இராசரத்தினம் வித்தியானந்தன் (யாழ். ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்), சிவ குரு சிவதாசன் (யாழ். இந்துக்கல்லூரி).

**சிறுகதை**

திருமதி கவின்ஜா நவநீதா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கனேஸ்வரி தனமூர்த்தி (யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), சி. சுரேஸ்குமார் (யாழ். கொக்குவில் இராம கிருஷ்ண வித்தியாலயம்).

**கவிதை**

ஜெனித்தா இராஜதுரை (யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி), வி. சாந்தினி (யாழ். பத்தமேனி இரட்ணேஸ்வரி வித்தியாலயம்), பொ. சகலகலாநிதி (யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரி).

**கட்டுரை**

செல்வி. சி. சகுந்தலா தேவி (யாழ். ஊரெழு கணேச வித்தியாலயம்), செறின் வெஜினியா செபமாலை (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பொ. சகலகலாநிதி (யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்).

**குறுநாடக ஆற்றுகைப் போட்டி**

யாழ். புனித யோன் பொஸ்கோ வித்தியாலயம். (ஓ-7)

## கிராமிய பாடல் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண திருமறைக் கலாமன்றத்தினால் 2009 ஆம் ஆண்டில் கிராமிய பாடல் போட்டி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்கென கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் கிழக்கு, குருநகர் மேற்கு, நாவாந்துறை ஆகிய ஐந்து கிராமங்கள் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மிக விரைவில் இப்போட்டி நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-30)

## சிகரெட் விற்பனை விலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை புகையிலை கம்பனியால் யாழ். மாவட்டத்திற்கான நிர்ணயிக்கப்பட்ட சிகரெட் விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி டண்கிஸ் - 19/-, பி+எச் 19/-, போல் மோர் 72-14/-, ஜேபிஜிஎல் - 18/-, போர் ஏசஸ் -10/-திறீ றோசஸ் கப்ஸ்ரன் - 4/-, என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விற்பனையாளர்கள் குறிப்பிட்ட விலைகளில் விற்பனை செய்யும் படியும், இவ் விலைக்கு விற்பனை செய்யாத வர்த்தகர்களுக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார். (ஓ)

## பொருளாதார மீன்பிடியியல் தொடர்பான செயலமர்வு

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் மீன்பிடித்துறையினர் நடத்தும் பொருளாதார மீன்பிடியியல் பற்றிய செயலமர்வு இன்று புதன்கிழமை மீன்பிடியியல் துறை விரிவுரை மண்டபத்தில் காலை 9.00 மணியிலிருந்து மதியம் 2.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் சுறாச்செட்டை பதனிடல், இலாப மீட்டும் பொழுது போக்கான அலங்கார மீன் வளர்ப்பு, ஆய்வுகூட ஆட்பீமியா (Artemia) (ஒரு வகை ரூல் போன்ற உயிரினம்) வளர்ப்பு தொடர்பான கருத்துரைகளை மீன்பிடியியல் ஆலோசனை நிபுணர் கலாநிதி செல்லப்பா சிவலிங்கம் வழங்கவுள்ளார். இந்நிகழ்வில் ஆர்வமுள்ள எவரும் பங்குபற்றலாம். (ஓ)




## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஆரம்பக்கல்வி முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் நா. சுவாமிநாதனால் தொகுப்பாக்கம் செய்யப்பட்டு நீர்வேலி நற்பணிச் சங்கம் சுவிஸ் அமைப்பினரால் வெளியிடப்படும் தகவல் களஞ்சியம் பொது அறிவு நூலின் வெளியீட்டு விழா நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர். இ. குணநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேசச் செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் கலந்து கொள்வதுடன் நூலின் வெளியீட்டுரையை சங்கானைக் கோட்ட கல்வி அலுவலர் துரை. எங்கரசுவும் மதிப்பீட்டுரையை ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆலோசகர் அ. சோமாஸ்கந்தனும் நிகழ்த்தவுள்ளனர். (ஓ)

## கைதடி முதியோர் இல்ல முதியோர் தின இறுதிநாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லம் நடத்தும் முதியோர் தின விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அதிபர் கே. கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ப. சிவலிங்கம், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம. வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சிவஸ்ரீ யோ. குருசாமிக் குருக்கள், அருட்தந்தை சவரிமுத்து ஜெயராட் ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து சிறுப்பிட்டி கலைஞானமணி க. சத்தியதாஸ் வில்லிசைக் குழுவினரின் "தீர்க்க சுமங்கலி" வில்லிசையும் நடைபெறவுள்ளது.

அடுத்து முதியோர்களுக்கு பரிசுவழங்கல், மற்றும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கல் வைபவமும் இடம்பெறவுள்ளது. (ஓ)








நல்லூர் மங்கையக்கரசி மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் தினநிகழ்வு நேற்று பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்குவதையும், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராஜா உரையாற்றுவதையும் ஆசிரியர் குழு அரங்கில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.





வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்த ஏ-9 பாதையூடாக கர்ப்பிணித் தாய்மார்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் பஸ்களில் அழைத்துவரப்படுவதையும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் கே. என் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அவர்களை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

### க.பொ.த. சாதாரண தர விசேட பரீட்சை (கணிதம் II-2009

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 2009 டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.சா/த. விசேட பரீட்சை கணிதம் II பரீட்சைக்குத் தோற்றவுள்ள , தோற்ற விரும்பும் நலன்புரி நிலையங்கள் நிவாரண கிராமங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த பரீட்சாத்திகள் எதிர்வரும் 12ஆம ;திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலய கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்திற்கு சமூகமளிக்குமாறு யாழ். வலயக் கல்பிப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

### நூல் வெளியீடும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

கல்வி மற்றும் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான சமகாலத் தகவல் தொழில் நுட்ப நூல் வெளியீடும் கருத்தரங்கும் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (4)

## ஜனநாயகத்தை

# சொந்த ஊரில் பாதுகாக்க முடியாத ஜனாதிபதி நாட்டிற்குள் எப்படி பாதுகாக்கப் போகிறார்

## ஜே.வி.பி.எம். விஜித்த ஹேரத் கேள்வி

(கொழும்பு)

சொந்த ஊரில் ஜனநாயகத்தை பாதுகாக்க முடியாத ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் எவ்வாறு நாட்டிற்குள் ஜனநாயகத்தை பாதுகாக்க போகிறார்கள் என ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் கேள்வி எழுப்பினார்.

வாக்குச் சாவடிகளுக்கு செல்ல விடாது பொதுமக்களை அச்சத்திற்குள்ளாக்கி தென் மாகாண சபை தேர்தலை சீர்குலைத்து மோசடிகளை நடத்த அரசாங்கம் முயற்சி செய்வதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

தென்மாகாணத்தில் எதிர்க்கட்சிகளின் காரியாலயங்கள் தாக்கப்படுவது தொடர்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெளிவுபடுத்துகையிலேயே விஜித்த ஹேரத் எம்.பி. மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் சட்டம் இன்று எதிர்க்கட்சிகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது. அரசாங்கமும் அரச சார்பான கட்சிகளும் எவ்விதமான தேர்தல் சட்டங்களையோ விதிமுறைகளையோ கடைப்பிடிப்பது இல்லை. இந்த நிலையில் எதிர்க்கட்சிகள் பாரியளவிலான அடக்கு முறைக்குள் தள்ளிவிடப்பட்டுள்ளன. தென்மாகாணத்தில் குண்டர்களின் அடாவடித் தனம் தாங்கமுடியவில்லை. .

கடந்த ஞாயிறு இரவு மாத்திரம் ஜே.வி.பி.யின் 11 தேர்தல் காரியாலயங்கள் உடைத்தெறியப்பட்டுள்ளன. இது தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்தாலும் விசாரணைகள் இல்லை.

தென்மாகாண தேர்தலுக்கான 16 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகின்றன. இவர்களின் பணி தொடர்பாகவும் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

அரச சொத்துக்கள் கண் எதிரே துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன. அது தொடர்பாக கேட்பாரில்லை. அண்மையில் தென் மாகாணத்தில் நடைபெற்ற அரசாங்கத்தின் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றிற்கு 300ற்கும் அதிகமான அரச பஸ்கள் வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப் பட்டிருந்தன. பொதுமக்களின் பணம் கேட்போர் இல்லாமல் மோசடி செய்யப்படு கின்றது.

மாகாண சபைத்தேர்தலுக்கே அரசாங்கம் இவ்வாறு மிகவும் கொடூரமாக செயற் படுகின்றது என்றால் எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் நிலைமை இன்னும் மோசமடையலாம் எனவும் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## தென் மாகாண சபை

# தேர்தலில் போட்டியிடும் ஐ.தே.க வேட்பாளர் துப்பாக்கி முனையில் தாக்கல்

(கொழும்பு)

தென் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிதேசிய கட்சி வேட்பாளர் ஒருவர் நேற்று காலை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டு தாக்கப்பட்ட நிலையில் மாத்தறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை மாத்தறையில் இடம் பெற்ற இந்த சம்பவம் குறித்து கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார்.

உதய திஸநாயக்க என்ற வேட்பாளரே தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசதரப்பு வேட்பாளர்கள் தொடர்ச்சியாக தாக்கி வருவதாக திஸ்ஸ அத்தநாயக்கா தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பாலித ரங்கபண்டாரவின் வீடும் அலுவலகமும் கடந்த ஞாயிற்றுக் கிழமை தாக்கப்பட்டமை குறித்தும் திஸ்ஸ அத்த நாயக்கா தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-4)

## புலிகள் அமைப்பைச் சேர்ந்த கேபியை இந்தியா விசாரிக்க இலங்கை அரசு மறுப்பு

# இந்தியச் செய்திகள் தகவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த குமரன் பத்மநாதன் செல்வராஜா பத்மநாதன் என்கிற கேபியை இந்தியா விசாரிக்க இப்போதைக்கு அனுமதிக்க முடியாது என இலங்கை அரசாங்கம் அறிவித்திருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில்,

கடந்த ஓகஸ்ட் 10ஆம் திகதி கேபி கைது செய்யப்பட்டார். அவரிடம் இலங்கை அதிகாரிகள் இன்னும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த விசாரணைகள் முடிவடைந்து சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னரே இந்தியா உள்ளிட்ட பிற நாடுகள் அவரை விசாரிக்க அனுமதிப்பதென அரசாங்கம் முடிபு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலையாளிகளுக்கு கேபிதான் நிதி உதவி வழங்கினார். ஆயுதங்களை வாங்கி அளித்தார் என்று இந்தியா கருதுகிறது. இது தொடர்பாக கேபியிடம் விசாரணை நடத்தினால் பல முக்கிய தகவல்கள் கிடைக்கும் என்றும் அது நம்புகிறது.

கேபியை விசா்ரிக்க ஏற்கனவே இலங்கையிடம் அனுமதி கோரியுள்ளது இந்தியா. கேபியை விசாரிக்க சிபிஐ குழுவும் கூட தயார் நிலைய்யில் இருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் கேபியை இப்போதைக்கு யாரிடமும் காட்டுவதற்கோ அவரை விசாரிக்கவோ அனுமதிப்பதாக இல்லை என்ற நிலைப் பாட்டையே இலங்கை அரசு கொண்டிருப் பதாகச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (ஓ-4)


# இரண்டின் பலம்



ஒரு குழந்தையின் முதலிரண்டு வருடங்களிலும் போஷாக்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. குறைந்தது ஆறு மாதங்களாவது குழந்தைக்கு தாய்ப்பால் வழங்குவது மிகவும் இன்றி யமையாதது. அதனைத் தொடர்ந்து மரக்கறிகள் , பழங்கள் மற்றும் மீன் போன்ற போஷாக்கு உணவு வகைகளையும் இரண்டு வயது வரை வழங்குதல் , உங்கள் குழந்தையின் சந்தோஷமான மற்றும் ஆரோக்கியமான வாழ்விற்கு வித்திடுகிறது.


Save the Children

EVERY ONE

# மக்கள் வாழ்வதற்கு மிகவும் சிறந்த நாடு நோர்வே

## ஐ. நா. தெரிவிப்பு

மக்கள் வாழ்க்கைக்கு மிகவும் உசிதமான நாடு நோர்வே என ஐக்கிய நாடுகள் ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நாட்டு குடிமக்கள் அனுபவித்து வரும் வசதிகளுக்கு ஏற்ப 182 நாடுகள் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வரிசையில் வாழ்வதற்கு மிகவும் சிறந்த நாடாக நோர்வேயும் ,மிகவும் மோசமான நாடாக நையிரியாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆயுட்காலம் ,கல்வி அறிவு ,பாடசாலை வசதிகள் ,நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த மதிப்பீடு நடத்தப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு திரட்டப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டே ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.




வாழ்வதற்கு மிகவும் உசிதமான நாடுகளின் பட்டியலில் நோர்வே முதலாம் இடத்தையும் அவுஸ்திரேலியா இரண்டாம் இடத்தையும் ஐஸ்லாந்து மூன்றாம் இடத்தையும் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வாழ்வதற்கு மிகவும் உசிதமான நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா 13ஆம் இடத்தையும் பிரித்தானியா 21ஆம் இடத் தையும் வகிக்கின்றன.

மேலும் மிகவும் மோசமான நாடுகளின் வரிசையில் நையர் முதலாம் இடத்தையும் , ஆப்கானிஸ்தான் இரண்டாம் இடத்தையும் , சியரோ லியோன் மூன்றாம் இடத்தையும் வகிக்கின்றன.

இதேவேளை இந்த ஆய்விற்காக பயன்படுத்தப்பட்ட புள்ளி விபரங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. குறிப்பாக உலகப் பொருளாதார நெருக்கடியின் பாதகமான அதிர்வுகள் உலகின் பல நாடுகளை தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

## அணுசக்தி திட்டத்தை கண்காணிக்க தனியமைப்பு

(டுபாய்)

நாட்டின் ஆக்க பூர்வமான அணுசக்தித் திட்டங்களைக் கண்காணிக்கும் வகையில் தனி அமைப்பு ஒன்றை ஏற்படுத்த ஐக்கிய அரபு அமீரகம் முடிபு செய்துள்ளது.

உலக நாடுகள் அணுசக்தியை ஆக்க பூர்வமாகப் பயன்படுத்துவதை உறுதி செய்யும் சர்வதேச அணுசக்தி முகமையின் (ஐஏஇஏ) விதி?முறைகளுக்கு இணங்க ஐக்கிய அரபு அமீரகம் இந்த முடிவெடுத்துள்ளது. (ஓ-4)

# இஸ்லாமாபாத்தில் குண்டுவெடிப்பு

## மூவர் பலி ; பலர் படுகாயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் மதியம் நடந்த குண்டுவெடிப்பில் இரண்டு பெண்கள் உட்பட 3 பேர் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர்.

இஸ்லாமாபாத்தில் ஐ.நா.வின் உலக உணவு கழக கிளை (டபிள்யு .எப்.பி) செயற்பட்டு வருகிறது.

தலிபான் பாக் படைகளுக் கிடையிலான போரில் ஸ்வாட் பள்ளத்தாக்கில் இருந்து வெளியேறிய 20 இலட்சம் மக்களுக்கு உணவு உள்ளிட்ட பல்வேறு அடிப்படைத் தேவைகளை இந்நிறுவனம் வழங்கி வருகிறது.

இந்த அலுவலகம் பலத்த பாதுகாப்பு வலயத்தில் இருக்கிறது.

நேற்று முன்தினம் மதியம் 12.15 மணிக்கு இங்கே குண்டு வெடித்தது.

இக்கொடூர சம்பவத்தில் இரண்டு பாகிஸ்தானிய பெண்களும் ஈராக்கைச் சேர்ந்த ஒருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர். 5 அல்லது 6 பேர்கள் காயமடைந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் மனித வெடிகுண்டாக யாரும் ஈடுபட்டிருக்க வாய்ப்பில்லை. சம்பவ இடத்தில் இருந்து 8 கிலோ வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. பலத்த பாதுகாப்பில் இருக்கும் அந்த அலுவலகத்திற்குள் வந்து குற்றவாளிகள் வெடி குண்டு வைத்தது எப்படி என்பது தெரியவில்லை.

அலுவலக கட்டடம் புகை மயமாக காட்சியளித்தது.

இந்த அலுவலகம் அருகில் தான் அதிபர் சர்தாரி முன்பு வாழ்ந்த வீடு பொலிஸ் தலைமையகம் மற்றும் மாவட்ட நிர்வாக அலுவலகம் ஆகியன அமைந்துள் ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# மருத்துவத் துறையில் 3 அமெரிக்கர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது

(சுவீடன்)

டைனைமைட்டை கண்டு பிடித்த ஆல்பிரட் நோபலின் நினைவாக 1901 ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு துறைகளில் சாதனை புரிபவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

இதன் பிரகாரம் அமெரிக்காவைச் சேர்ந்த எலிசபெத் பிளாக்பர்ன், கரோல் கிரெய்டர் ,ஜெக் சோஸ்டாக் ஆகியோருக்கு 2009ஆம் ஆண்டுக்கான மருத்துவத்திற்கான நோபல் பரிசு திங்கட்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.

**இதில் எலிசபெத் பிளாக்பர்ன்**

அவுஸ்திரேலியாவில் 1948இல் பிறந்தவர். தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார். பிரிட்டனின் கேம்பிறிச் பல்கலைக் கழகத்தில் 1975இல் டாக்டர் பட்டம் பெற்றவர்.

**ஜேக் சோஸ்டாக்**

லண்டனில் 1952இல் பிறந்து அமெரிக்க குடியுரிமை பெற்றுள்ள இவர் நியூயோர்க்கின் கார்னெல் பல்கலைக்கழகத்தில் 1977இல் டாக்டர் பட்டம் பெற்றார்.

1979 முதல் ஹார்வர்டு மருத்துவப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வருகிறார்.

**கரோல் கிரெய்டர்**

அமெரிக்கரான கரோல் கிரெய்டர் 1961இல் பிறந்தார். 1987இல் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற் றார்.

வயோதிகம் தொடர்பான முக்கிய கண்டுபிடிப்புக்காக அவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. இவர்களது கண்டுபிடிப்பு புற்றுநோய் தொடர்பான ஆராய்ச்சிக்கு



பெரிதும் உதவும்.

வயோதிகத்திற்கான காரணமான செல் மற்றும் செல் பிரிதலின் போது குரோமோசோம்கள் எவ்வாறு பிரதி எடுக்கின்றன என்பதை இவர்கள் கண்டறிந்துள்ளனர்.

நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது தங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக சுவீடன் வானொலிக்கு அளித்த பேட்டியில் ஆய்வாளர்கள் மூவரும் தெரிவித்துள்ளனர். வரும் டிசம்பர் 10 ஆம் திகதி ஸ்டாக்ஹோம் மற்றும் ஆஸ்லோவில் நடைபெறும் விழாவில் இவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படவுள்ளது.

நோபல் பரிசில் தங்கப்பதக்கம், பட்டயம் மற்றும் சுமார் ரூபா 7 கோடி ரொக்கமாகி யவை அடங்கும். பரிசுத் தொகை மூவருக் கும் பகிர்ந்தளிக்கப்படும் என அறிவிக்கப் படுகிறது. (ஓ-4)

# தாய்லாந்தில் ரயில் தடம் புரண்டதில் 7 பயணிகள் பலி ;100 பேர் காயம்



தாய்லாந்தில் உள்ள கியூவாகின் நகரில் இருந்து பாங்கொக்குக்கு புறப்பட்டு வந்த பயணிகள் ரயில் நேற்று அதிகாலை தடம் புரண்டது.

இதனால் ரயிலின் 6 பெட்டிகள் தண்டவாளத்தில் இருந்து தடம் புரண்டன. இந்த விபத்தில் 7 பயணிகள் உயிரிழந்தனர். 100 பேர் காயம் அடைந்தனர்.

ஹூவா ஹின் நகரின் தெற்குப் பகுதியிலிருந்து 13 கிலோ மீற்றர் தொலைவில் இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தாய்லாந்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த அனைவரும் தாய்லாந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ரயில் தடம் புரண்டது குறித்து விசாரணை நடை பெற்று வருகின்றது. (ஓ-4)

# கிரேக்கத்தில் பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி பெற்றுள்ளது

கிரேக்கத்தின் பொதுத் தேர்தலில் அந்நாட்டு எதிர்க்கட்சியான பன்ஹெல்லனிக் சோஷலிஸ்ட் மூவ்மென்ட் (பஸோக்)வெற்றி பெற்றுள்ளது.

பதவி விலகிச் செல்லும் பிரதமர் கொஸ்தாஸ் கரன்மன்லிஸ் பஸோக் கட்சியினர் தலைவர் ஜோர்ஜ் பபன்ட்ரேயுவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இந்தத் தேர்தலில் பஸோக் கட்சி 43 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குக்களை பெற்றுள்ளதுடன் புதிய ஜனநாயகக்கட்சி 35 சதவீதமான வாக்குகளைப் பெற்றுள்ளது.

இதன் பிரகாரம் பாராளுமன்றத்தில் முழுமையான பெரும் பான்மையைப் பெறுவதற்கு தேவையான வாக்குகளை பஸோக் கட்சி வென்றெடுத் துள்ளது.

மேற்படி கட்சி கடந்த 5 வருட காலத்திற் கும் அதிகமாக எதிர்க்கட்சி நிலையில் உள்ளது. (ஓ-4)

# விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்

19

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

பேராசிரியர் கு. சேதுராமன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

இக்காலத்தில் வாழ்ந்த சிற்றரசர்களின் அரண்மனைகளில் தீட்டப்பட்ட ஓவியங்களும் இங்கு குறிப்பிடத்தக்கனவாகும். இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனையில் விஜயரகுநாதன் சேதுபதியின் காலத்தில் வரையப்பட்ட ஓவியங்களில் இசை மற்றும் நடனக் குறிப்புகள் காட்டப்பட்டுள்ளன. இக்கால கட்டத்தில் தமிழகத்தில் முகலாயர் மற் றும் ஐரோப்பிய பண்பாட்டுத் தாக்கமும் ஏற்பட்டது. சேதுபது அரண்மனை ஓவியங்களில் இதனை உணரலாம். இங்கு முகலாயர் பாணியில் உடையணிந்து அமைந்துள்ள சேதுபதி மன்னர் முன்பு பெண்கள் முகலாய


விஜயநகர நாயக்கர் கால கலைப்படைப்புக்கள்

திருப்பெருந்துறை -நாயக்க கால ஓவியம்



ஆடை அலங்காரத்துடன் நாட்டிய மாடுகின்றனர். சேதுபதி மன்னர்களின் சிறந்தவரான இரகுநாத சேதுபதியை பல்லக்கில் தூக்கிச் செல்லும் காட்சியில் நாட்டிய பெண்களும், இசைவாணவரும் உள்ளனர். ஒரு ஓவியத் தொகுதியில் சேதுபதி மன்னர் முன்னிலையில் இரு பெண்களும் நாட்டியமாட, பிற பெண்கள் இசைக்கருவிகளை மீட்டும் காட்சி காணப்படுகின்றது. முத்து விஜயரகு நாதர் சேதுபதி இசையிலும், நாட்டியத்திலும் ஆர்வமிக்கவராய் இருந்துள்ளார். திருப்புடை மருதூர் நறும்புதநாதர் கோயில் ஓவியத்தில் நாட்டியமகளிர் ஆட இசைக் கலைஞர்கள் நாதசுவரம், குழல் போன்ற கருவிகளை இசைக்கின்றனர். இங்கு பெரிய நடராசா உரு வமும் உள்ளது.

விஜயநகர -நாயக்கர் கால சிற்பங்கள் அளவில் பெரியன. அவற்றில் நாட்டிய காட்சிகளும் இசைக்கருவிகளும் காணப்படுகின்றன. சிவபொருமானின் ஊர்த்துவ தாண்டவச் சிற்பங்கள் இக்காலத்தில் மதுரை மீனாட்சி - சுந்தரேசுவரர் கோயிலிலும் தென்காசி காசி விஸ் வநாதர் கோயிலிலும் இன்னும் பிற கோயில்களிலும் அமைக்கப்பட்டன. மதுரை புதுமண்டபத்தில் இதனைக் காணலாம். மதுரை மீனாட்சி சுந்தரரேசுவரர் கோயிலில் கம்பத்தடி மண்டபத்திலும் ஆயிரகங்கால் மண்டபத்திலும் புதுமண்டபத்திலும் நடராசர் சிற்பங்களும் அவரது நாட்டியத்துடன் தொடர்புடைய இசைவாணர்களும் வடிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கம்பத்தடி நடராசர் சிற்பத்திற்கும் அருகில் சிவகாமி (பார்வதி) நாட்கரங்களுடன் மத்தளம் வாசிக்கும் நந்தி, வியாக்கரபாதர் பதஞ்சலி மேளம் வாசிக்கும் திருமால் தும்புரு நாரதர் காளி போன்றோர் காட்டப்பட்டுள்ளனர். பதஞ்சலியும் வியாக்கரபாதரும் தினந்தோறும் சிவ நடனத்தைக் காண்டுகளிப்பது வழக்கமாகும். இதனைக் குறிக்கவே அவர்களது சிற்பங்களும் இங்கு காட்டப்பட்டுள்ளன. இவர்கள் காலத்து தூண்களிலும் சிறு சிறு நாட்டியச் சிற்பங்கள் வடிக்கப்பட்டன. இதனை அழகர் கோயில் கல்யாண மண்டபத்தில் காணலாம். ஏராளமான கோயில்களில் நடராசர் செப்புத் திருமேனி அமைக்கப் பட்டது. பேருரில் உள்ள நடராசர் சிற்பம் குறிப்பிடத்தக்க ஒன் றாகும். இது 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந் தது. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள் ளது. பிரான்ஸில் ரோடு திவுப் பள்ளியின் கலைக்கூடத்தில் இதே நூற்றாண்டைச் சேர்ந்த அற்புதமான நடராசர் திரு மேனி உள் ளது. மதுரை மீனாட்சி -சுந்ரேசுவரர் கோயில்



மதுரை -கோயில் நகரம்

சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு முன்பாக உள்ள மண்டபத்தில் குழு நடனம் சித்தரிக் கப்பட்டுள் ளது. இவை விதானத்திற்கு சற்று கீழே அமைக்கப்பட்டுள்ளது. இவர்களுடன் சேர்ந்து தோள் இசைக்கருவிகளை இசைக்கும் கலைஞர்களும் உள்ளனர். திருநெல் வேலி மாவட்டம் நவதிருப்பதி தளங்களில் உள்ள கோயில்களில் நடனச் சிற்பங்கள் காணப்படுகின்றன. ஆழ்வார் திருநகரி கோயிலின் மேற்கூரையின் நடன மாதர்க ளின் சிற்பங்கள் காணப்படுகின்றன. திருக் குறுங்குடி கோபுர மாடங்களில் நடன மாதர் கள் ஆடும் காட்சி வடிக்கப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் மற்றொரு சிறப்பு யாதெனில் மர சிற்பங்களின கவினுறு அழகாகும். இம் மரச்சிற்பங்களிலும் நாட்டியம் காட்டப்பட்டுள்ளது. நாங்கு நேரி வி ஸ்ணு கோயில் நாடகச் சட்டங்களிலும் மண்டபத் தூண்களிலும் நாட்டிய சிற்பங்கள் காணப்படு கின்றன. இங்குள்ள சபா மண்டபத்திலும், தூண் களிலும் ஆடல் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் மகா மண்டபத்தில் தனி நபர் நடனமும், இருவர் ஆடலும் குழு நாட்டியமும் சிற்பங்களாக வடிக்கப் பட்டுள்ளன. இக்கோயிலில் முன் மண்டபத்தில் உள்ள மரச் சிற்பங்களும் நாட்டியக் கலையைப் பிரதி பலிக்கின்றன.

(தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

142



ஆகவே விழுமியங்களை சரி செய்யச் சட்டத்தின் உதவியும் தேவைப்படுகின்றது. அதாவது சமூகத்தில் அதிகார வலுவற்றவர்களின் உரிமைகளும் சந்தர்ப்பங்களும் ஆபத்துக் குள்ளாகும் போது அரசு தான் சட் டம் என்ற இரும்புக்கரத்தால் இதனைச் சரிப்படுத்த வேண்டும்.

அமெரிக்க கறுப்பர்களின் குடியுரிமைப் போராட்டத்தில் உயர் நீதிமன்றம் தலையிட்டு 1964இல் குடியுரிமைச்சட்டத்தை பிறப்பித்தது. 1965இல் வாக்குரிமைச்சட்டம் இயற்றப் பட்டது. இந்தச் சட்டங்கள் பற்றிய விவாதங்கள் நடந்த போது பலர் கூறினார்கள்,

'அரசு குடிமக்களின் தனி வாழ்வில் தான் மூக்கை நுழைக்கக்கூடாது. எந்தச் சட்டத்தாலும் வெள்ளையர்களை கறுப்பர்களுடன் சேர்ந்து வாழுமாறு வற்புறுத்த முடியாது' என்றனர்.

மார்ட்டின் லூதர் கிங் ' எந்தச் சட்டமும் யாரையும் என்னை நேசிக்குமாறு சொல்ல முடியாது. ஆனால் என்னைத் தூக்கிலிட்டு கொல்வதைத் தடுக்க அதனால் முடியும். அது தான் முக்கியமான விடயம்' என்று அதற்குப் பதிலளித்தார்.

ஆகவே தான் ஒபாமா தாங்கள் விரும்பும் சமுதாயத்தை படைத்த விழுமிய மாற்றமும் அதேநேரத்தில் கொள்கை மாற்றமும் தேவை எனக் கருதுகிறார். முன்னையது கலாசாரமாற்றம். பின்னையது அரச அதிகாரத்தால் கொண்டுவரும் மாற்றம்.

ஒபாமா நகரங்களுக்குள் இருக்கும் (Innercity) பாடசாலைகளின் நிலை களை உதாரணமாகக் காட்டுகிறார். சிறார்களின் படிப்பு மிகவும் பாதிக்கப்பட்டுள் ளது. பாழ டைந்த கட்டடம், பயிற்றப்படாத ஆசிரியர்கள், உபயோகப்படுத்த முடியாத தளபாடங்கள் என்பவை தான் காரணங்கள்.

ஆகவே தான் முதலில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கடும் உழைப்பின் மகிமையையும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

ஆனால் சமுதாயம் ஏழைக்குழந்தைகள் தங்கள் சூழலிலே படித்து முன்னுக்கு வருவார்கள் என்று பாசாங்கு பண்ணிக்கொண்டிருக்கின்றது. தங்களை தாங்களே ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே தான் ஒபாமா ஜனநாயகக் கட்சியில் சேர்ந்து உழைத்து அரசாங்கத்தின் மூலம் தங்கள் இனத்தின் விழுமியங்களுக்கு, பரஸ்பர பொறுப்புணர்வுகளுக்கு, சமூக ஒருமைப்பாட்டுக்கு முழு வடிவம் கொடுக்க முடியும் என்ற அசையாத நம்பிக்கையை வெளியிட்டார்.

(தொடரும்)

ஜம்பொன்

# இலங்கை இராணுவம் குறித்து ஹிலாரி கிளிண்டன் பேசிய பேச்சை வாபஸ் பெற வேண்டும்

## அமெரிக்கத் தூதுவரிடம் ரோகித போகொல்லாகம வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினர் மீது பாலியல் குற்றம் சுமத்திய சதிவலையின் பின்னணியின் அரச சார்பற்ற நிறுவனமொன்று இயங்கி வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

போர்க் காலத்தில் தமிழ் பெண்கள் மீது படையினர் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை மேற்கொண்டதாக மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரம் போலியானதென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இராணுவப் படையினர் மீது சேறு பூசும் நோக்கில் இவ்வாறான பொய்ப் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

குறித்த அரச சார்பற்ற நிறுவனத்தின் உண்மைக்குப் புறம்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளிண்ரனும் அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

அரச சார்பற்ற நிறுவனம் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக குறிப்பிடப்படுகிறது.

இலங்கை இராணுவம் குறித்து ஹிலாரி கிளிண்டன் பேசிய பேச்சை வாபஸ் பெற வேண்டும் என அதிபர் ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் அமெரிக்க தூதுவரிடம் வெளியுறவுத்துறை அமைச்சர் ரோஹித போகொல்லாகம வற்புறுத்தியதாக கூறப்படுகிறது. (ஓ-6)

# இடம்பெயர் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படும்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

இடம்பெயர் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சகல மக்களுக்கும் இந்த அடையாள அட்டைகள் விநியோகம் செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக அகதி முகாம்களில் தங்கியுள்ள 12 வயதுக்கும் மேற்பட்ட சகலருக்கும் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறான விசேட அடையாள அட்டைகள் ஏற்கனவே சில மக்களுக்கு வழங்கப்பட்டுள் ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் இன்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# படைவீரர்களின் குற்றச் செயல்கள் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்

## மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

படைவீரர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக ஆதாரங்களுடன் முறைப்பாடு செய்யப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை பாதுகாப்பு படையினரின் ஒழுக்கம் தொடர்பில் பெருமைபட்டுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் குற்றச் செயல்களில் படைவீரர்கள் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் சரியான முறையில் சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க ஒருபோதும் அரசாங்கம் தயங்காது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சனல் 4 ஊடகம் இலங்கையில் சிங்களவர்- தமிழர்களுக்கு இடையில் விரிசலை ஏற்படுத்தும் வகையில் போலியான காட்சிகளை வெளியிட்டுள்ளதாகவும் உடனடியாக இந்த சம்பவம் தொடர்பில் அந்த ஊடகம் மன்னிப்பு கோர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)




சர்வதேச அகிம்சை தினமாகிய காந்தி பிறந்த நாளில் சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெற்ற காந்திய நூற் கண்காட்சியும் அகிம்சை தின விழாவில் தலைமை தாங்கிய ஓய்வு பெற்ற அதிபர் ஆ. சபாரத்தினம், க. செல்வக்குமரன், சு. தம்பித்துரை ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படங்களில் காணலாம்.

(படம் : எஸ். கதிரவேலு)

# இந்தியா-இலங்கை கடற்படைகளின் கூட்டு பயிற்சி கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

இந்திய இலங்கை கடற்படைகளின் கூட்டுப்பயிற்சி கொழும்பில் திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

5 நாள் நடைபெறும் இப் பயிற்சிக்காக ஐ.என்.எஸ். கிருஷ்ணா ஐ.என்.எஸ்.சர்துல் சிஜில் வருணா ஆகிய 3 இந்திய கடற்படைக் கப்பல்கள் முன்னதாக கொழும்பு சென்றன.

இதில் ஐஎன்எஸ் கிருஷ்ணா -வில் ஏற்பட்ட பழுது காரணமாக பயிற்சியில் திங்கட்கிழமை ஈடுபடவில்லை என இலங்கை கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### தேற்றா மரம்

Botanical Name- Strychnos nux-vomica
Family - Loganiaceae
Engl - Clearing nut-tree
Sinh - Ingini

நடுத்தர உயரமுள்ள மரம். தேற்றாமரத்தின் அடிமரப்பகுதி நீள்வரிப்பள்ளங்களை ஒழுங்கற்ற முறையில், பெற்றுக் காணப்படுகின்றது. இலைகள் தோல் போன்றவை. முட்டை வடிவின ; இரு நுனிகளிலும் குவிந்தது ; மூன்று நரம்பு கொண்டது. மலர்கள் மணமுடையது. வெண்மை நிறத்தின ; அல்லி குழல் மணி வடிவினது ; இதழ்களின் அடியில் மென்தூலிக் கற்கைகள் உள்ளன. கனிகள் கோணவடிவின ; சதைப் பற்றுடையன ; கனிந்த நிலையில் கறுப்பு நிறமுடையவை ; ஒற்றை விதை கொண்டவை ; விதைகள் வட்ட வடிவின ; தட்டையானவை ; கோடையில் மலர்வன.

### பரம்பலும், இனவிருத்தியும்

யாழ். மாவட்டத்தில் மட்டுவில், மீசாலை, நவாலி போன்ற பிரதேசங்களில் பரம்பல் அதிகம் காணப்படுகின்றது. வேர்க்கன்றுகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

### மருத்துவப் பயன்கள்

◆ இதன் விதைகள் கலங்கிய குடிநீரை தெளிய வைக்கும் ஆற்றல் உடையது. இதற்கு விதைகளிலுள்ள அல்புமின் கேசின் (albumen & casin) காரணமாக கருதப்படுகிறது.

மன்னார் பிரதேசத்தில் இன்றும் சில ஏரிக்கரைகளில் தேற்றா மரங்களை வளர்க்கிறார்கள். ஏனெனில் அம் மரத்திலிருந்து ஏரியினுள் விழும் தேற்றாவிதைகளினால் நீர் தூய்மையாக்கப்படும் என்பதற்காக தேற்றா விதைகளினால் நீர் தூய்மைக்கப்படும் என்பதற்காக தேற்றா மரத்தின் கட்டைக்கும் (wood) நீரினை தூய்மையாக்கும் தன்மையுண்டு. நாம் பயன்படுத்தும் கிணறுகளினும் தேற்றா மரக்கட்டை அல்லது தேற்றாவிதைகளை போடுவதால் நீர் சுத்திகரிக்கப்படும்.



◆ தேற்றா கனியின் சதைப்பகுதியை உண்டால் சீத பேதியினை கட்டுப்படுத்தும். இதற்கான சிறந்த அமெரிக்க மூலிகை மருந்து "Ipecacuanha" இற்கு சரியான மாற்று மருந்தாக கருதப்படுகின்றது.

முதிர்ந்த கனியின் சூரணம் வாந்தியினைத் தூண்டும்.

◆ ஒன்று அல்லது அரை விதையினை மோரில் பசை போன்று அரைத்து உள்ளுக்கு தொடர்ந்து ஒரு வாரம் கொடுத்தால் நாள்பட்ட வயிற்றுப் போக்கு தடைப்படும். சிறுநீர் உறுப்புகளின் எரிச்சலைத் தடுக்கவும் விதையின் பொடியை பாலில் கலந்து கொடுக்கப் படுகின்றது.

◆ தேற்றா விதைகளை கொதிக்க வைக்க கூழாகும். இதனை தேனில் குழைத்து கட்டிகள் பழுக்க பயன்படுத்தலாம்.

◆ "தேற்றங் கொட்டை யிட்டுத் தேற்று மைந்தரை" எனும் பழமொழிக்கமைய சிறிய அளவில் குழந்தைகட்கு கொடுத்துவர ஊட்டச் சத்தும் நரம்பும் பலப்படும்.

◆ நீரிழிவு நோயாளிகட்கு தேற்றாவிதை, விளாம்பிசின், ஆவாரை விதை ஒரே அளவாக எடுத்து இடித்து சூரணம் செய்து 1-2 கிராம் அளவு பசுமோரில் கலந்து கொடுக்க நீரிழிவு கட்டுப்படுவதுடன் சிறுநீர் கூடுதலாக கழிவதையும் தடுக்கும்.

தேற்றவிதை 30 கிராம், திப்பிலி 50 கிராம் இரண்டையும் நன்றாக அரைத்து 5 கிராம் அளவு காலையில் மட்டும் கொடுக்க வெள்ளை சாய்தல், பெரும்பாடு தீரும்.

◆ தேற்றங்கொட்டை 150கிராம், சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், சிற்றரத்தை, நெல்லி முள்ளி, கடுக்காய் ஒவ்வொன்றும் 15 கிராம் வீதம் எடுத்து தேற்றங் கொட்டையை நன்கு வறுத்து மற்றய எல்லாவற்றையும் இளவறுப்பாக வறுத்து பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். பசுவின் பால் 250 மில்லிக்கு 120 கிராம் சீனி சேர்த்து பாகு பதத்தில் காய்ச்சி, மேற்படி அரித்த பொடியைக் கொட்டிக் கிளறி பசுநெய் 50 மில்லி, தேன் 250 மில்லி சேர்த்து லேகிய பதத்தில் கிளறி வைத்துக் கொள்ளவும். 5 கிராம் அளவு ஒரு நாளைக்கு இரண்டு வேளை உட்கொள்ளவும். மூல நோய்க்கு சிறந்த மூலிகை மருந்தாகும்.

**குறிப்பு** : தேற்றாங்கொட்டையை பயன்படுத்த முன்பு பசுவின் பாலில் 30 நிமிடநேரம் ஊறவைத்து எடுத்து பயன்படுத்தினால் நல்லது.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி


**குறிப்பு** : கடந்த வாரம் வெளியான **வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை** பகுதியில் கொவ்வையின் தாவரவியற் பெயர், குடும்பம் என்பன தவறாக வெளியிடப்பட்டுள்ளது. சரியான விபரங்கள் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| Botanical Name | - தாவரவியற் பெயர் | - Coccinea grandis |
| Family | - குடும்பம் | - Cucurbitaceae |
| Engl | - ஆங்கில பெயர் | - ---- |
| Sinh | - சிங்கள பெயர் | - Kowakka |

# கங்கை நதியை தூய்மைப்படுத்தும் திட்டக் கமிஷனுடன் பிரதமர் ஆலோசனை

(புதுடில்லி)

கங்கை நதியை தூய்மைப்படுத்துவது குறித்து பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற



ஆய்வுக் கூட்டத்தில் உத்தரகண்ட் முதல்வர் ரமேஷ் பொக்ரியால், பிகார் முதல்வர் நிதீஷ் குமார் மற்றும் மேற்குவங்கம், உத்தரப் பிரதேச மாநிலங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மூன்று மணி நேரத்துக்கும் அதிகமாக நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் திட்டக் கமிஷன் துணைத் தலைவர் மான்டேக் சிங்க அலுவாலியாவும் பங்கேற்றார்.

கங்கை நதிப்படுகை ஆணையம் அமைக்கப்பட்ட பிறகு நடைபெறும் முதலாவது கூட்டம் இதுவாகும். மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

தேசிய நதியான கங்கையை தூய்மைபடுத்துவது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப் பட்டது. இந்த நதி பாயும் முக்கிய நகரங்களில் தூய்மைப் படுத்தும் நடவடிக்கையை தொடர் இடைவெளியில் மேற்கொள்வது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இவ்விதம் பராமரிப்பதில் உருவாகும் நடைமுறைச் சிக்கல்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. உத்தரகண்ட் மாநிலத்தில் கங்கை நதி உருவானாலும் அது பாயும் பிற நகர்களில் அதன் தன்மை மாறி விடுகிறது.

எனவே எந்தெந்த பகுதிகளில் எவ்விதம் அது மாசடைகிறது என்பதற்கேற்ப எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக உத்தரகண்ட் முதல்வர் ரமேஷ் பொக்ரியால் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கங்கை நதியை பராமரிக்க ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை கட்டணமில்லாமல் அளிக்க வேண்டும். அத்துடன் ஆண்டு தோறும் ரூ.10 ஆயிரம் கோடி தொகையை கங்கை நதி மேம்பாட்டுக்கு தர வேண்டும் என மத்திய அரசை கேட்டுக் கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்பட்ட கங்கை நதிப் படுகை ஆணையத்தில் உத்தரகண்ட் உத்தர பிரதேசம், பிகார், மேற்கு வங்கம் ஆகிய நான்கு மாநிலங்களும் உறுப்பினர்களாகும். (ஓ-4)

## சுடுகாட்டில்

## டிபன் சாப்பாடு குஜராத்தில் புதிய புரட்சி

(ஆமதாபாத்)

பகுத்தறிவு வாதிகள் மூட நம்பிக்கைகளை எதிர்க்கும் விதமாக தீபாவளிக்கு முதல்நாள் சுடுகாட்டில் 'டிபன்' சாப்பிடும் நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். குஜராத் மாநிலத்தில் தீபாவளிக்கு முதல்நாள் 'கலி சதுர்த்தசி' என்று அழைக்கப்படுகிறது.

தாந்திரீக முறைப்படி கலி சதுர்த்தசியன்று இரவில் பில்லி, சூனியம் போன்ற சில சடங்குளைச் செய்தால் வசிய சக்தி மற்றும் நோயற்ற உடல், செல்வம், வாழ்வில் அமைதி கிடைக்கும் என்பது இங்குள்ள நம்பிக்கை.

இதை மூட நம்பிக்கை என்கின்றனர். 'பாரத் ஜன விஞ்ஞான் ஜாதா' என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள். அந்த அமைப்பினர் கலி சதுர்த்தசியன்று சுடுகாட்டில் வடை, டீ, காபி சாப்பிடும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

மூடநம்பிக்கையைத் தாக்கும் இந்த நிகழ்ச்சி, ஒக்டோபர் 16 இல் மாநிலம் முழுவதும் 450 இடங்களில் நடக்கிறது. (ஓ-4)

# இலங்கை தமிழர்கள் இந்திய பிரஜாவுரிமை பெற விரும்பினால் குடியுரிமை வழங்குவதில் தவறில்லை

## முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ்

(கோவை)

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதில் தவறு இல்லை என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். தெரிவித்தார்.

கோவைக்கு திங்கட்கிழ்மை வந்த அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

அதிமுக கூட்டணியில் இருந்து விலகிய பாமக வரும் காலங்களில் தேர்தலில் தனித்தே நிற்கும் என்று எதிர்பார்க்கலாம். பலவீனமான கூட்டணியில் இருந்து அக்கட்சி வெளியேறியுள்ளது. இதில் யாருக்கும் லாப, நஷ்டம் கிடையாது.

தனித்து நிற்கும் நோக்கத்துடனேயே பாமக கூட்டணியில் இருந்து வெளியேறியுள்ளதாகத் தெரிகிறது. இந்த முடிவு வரவேற்புக்குரியது. தங்கள் மீதான வழக்கு வாபஸ் பெறப்பட்டால் மீண்டும் கூட்டணிக்கு முயற்சி செய்யலாம்.



தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டரின் ஆசை. அதற்கான காலநேரம் விரைவில் வரும் என எதிர்பார்க் கின்றோம்.

இலங்கையில் முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை அவர்களது சொந்த இடங்களில் இலங்கை அரசு குடியம ர்த்த மத்திய அரசு எல்லா நடவடிக்கைக ளும்எடுத்து வருகிறது. தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இலங்கைக்கு தூதுக் குழுவையும் அனுப்பி வைக்கும்.

தமிழகத்தில் வசிக்கும் இலங்கை அகதிகள் இந்திய அரசியல் சட்டத்தையும் இறையாண்மையையும் முழுமையாக ஏற்று தங்களை இந்திய பிரஜையாக மாற்றிக் கொள்ள விரும்பினால் அவர்களுக்கு குடியுரிமை வழங்குவதில் தவறு கிடையாது.

அதேநேரம் அகதிகள் என்ற போர்வையில் தீவிரவாதிகளும் , விடுதலைப் புலிகளும் இருந்தால் அவர்களுக்கு குடியுரிமை வழங்கக் கூடாது என்றார். (ஓ-4)

# வளரும் நாடுகளுக்கான நிதியத்துக்கு இந்தியா தனது பங்களிப்பை வழங்கும்

## மத்திய நிதி அமைச்சர் பிரணாப்

(புதுடில்லி)

வளரும் நாடுகளுக்கான நிதியத்தில் இந்தியாவும் தனது பங்களிப்பை அளிக்கும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். உலக வங்கி வளரும் நாடுகளுக்கு கடனுதவி வழங்குவதற்கு தனி நிதியத்தை நிர்வகிக்கிறது.

இதன்மூலம் வளரும் நாடுகளில் நிலவும் வறுமையை ஒழிப்பது மற்றும் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுக்கும் நிதி வழங்கப் படுகிறது. இந்த நிதியத்துக்கு இந்தியாவும் விரைவிலேயே தனது பங்களிப்பை அளிக்கும் என்று அவர் கூறினார்.

துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகரில் அன்னியச் செலாவணி நிதியம் (ஐஎம்எஃப்) மற்றும் உலக வங்கி அமைப்புகளின் ஆண்டு மாநாடு நடைபெறுகிறது.

சர்வதேச அளவில் நிதி நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்தியா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து நிதி நிர்வாக முறையை அறிய ஐரோப்பிய நாடுகள் ஆர்வம் காட்டின. இந்தியாவின் நிதி நிர்வாக அனுபவம் மேம்பாட்டு வழிமுறைகள் மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்டவற்றில் இந்தியா உள்ளிட்ட சில நாடுகளிடமிருந்து ஆலோசனை பெற முடிவு செய்யப்பட்டது. (ஓ-4)

# சமைக்காமலே சாதமாகும் புதிய ரக அரிசி கண்டுபிடிப்பு

## இந்திய அரிசி ஆராய்ச்சி நிறுவனம் தகவல்

சமைக்காமலே சாதமாக சாப்பிடும் புதிய ரக அரிசியை இந்திய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இதுகுறித்து ஒரிசாவின் கட்டாக் நகரில் அமைந்துள்ள இந்திய அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் தபன் குமார் ஆதியா, தெரிவிக்கையில்,

சமைக்காமலேயே சாப்பிடும் புதிய ரக அரிசியை எங்கள் ஆய்வகத்தில் கண்டுபிடித்துள்ளோம். அகானிபோரா என்று பெயரிடப்பட்டுள்ள இந்த அரிசியை சாப்பிடுவதற்கு நீரில் 45 நிமிடங்கள் ஊறவைக்க வேண்டும். சுடு தண்ணீர் என்றால் 15 நிமிடங்கள் ஊற வைத்தால் போதும்.

மரபணு மாற்றத்தின் மூலம் இந்த அரிசி வகையை நாங்கள் கண்டுபிடிக்கவில்லை. இந்தியாவில் பயிரிடப்படும் பிற வகை அரிசி போன்றதுதான் இந்த புதிய ரக அரிசி. 3 ஆண்டுகளாக நடைபெற்ற ஆராய்ச்சிக்குப் பின் இந்த அரிசியை எங்கள் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பிற அரிசிகளில் உள்ள அனைத்து வகையான சத்துக்களும் இதில் உண்டு என்றார் தபன் குமார். (ஓ-4)

# நெல்லை ராதாபுரம் பஸ் நிலையத்துக்கு காமராஜர் பெயரிடக்கோரி உண்ணாவிரதம் இருந்த 80 வயது முதியவர் கைது

(திருநெல்வேலி)

நெல்லை ராதாபுரம் பஸ் தரிப்பிடத்திற்கு காமராஜர் பெயரிடக்கோரி உண்ணாவிரதம் இருந்த 80 வயது முதியவர் கைது செய்யப் பட்டார். நெல்லை மாவட்டம் ராதாபுரத்தில் புதிய பஸ் தரிப்பிடம் கட்டப்பட்டுள்ளது.

இதை துணை முதல்வர் ஸ்டாலின் எதிர் வரும் 13 ஆம் திகதி திறந்துவைக்கவுள்ளார். பஸ் தரிப்பிடத்திற்கு காமராஜர் பெயர் சூட்ட வலியுறுத்தி ராதாபுரத்தை அடுத்துள்ள குமிளம்பாடு கிராமத்தில் தியாகி சுடலை முத்து (80) கடந்த 2 ஆம் திகதி முதல் உண்ணா விரதம் இருந்து வந்தார்.

நான்காவது நாளாக நேற்று முன்தினமும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்த அவரை பொலிஸார் கைது செய்து நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அவர் மீது தற்கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனையிலும் உண்ணாவிரதத்தைத் தொடர்வதாக சுடலை முத்து தெரிவித்தார். (ஓ-4)




# ஹிட்லர் கூட செய்யாத செயலை இலங்கை அதிபர் ராஜபக்ஷ செய்கிறார்

## விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன்

இலங்கையில் போர் முடிந்த பிறகும் வதை முகாமிற்கு செல்ல பத்திரிகையாளர்களை அனுமதிக்கவில்லை. இந்த செயலை ஹிட்லர் கூட செய்யவில்லை. ஆனால் ராஜபக்ஷ செய்கிறார். இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இலங்கை முகாம்களில் சிக்கி தவிக்கும் ஈழத் தமிழர்களை விடுவிக்க கோரியும் தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தும் இலங்கை அரசை கண்டித்தும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தமிழ் தேசிய விடுதலைப் பேரவை சார்பில் சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மெமோரியல் ஹால் அருகே நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கிய திருமாவளவன் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஓ-4)

# சர்வதேச நிதி உதவிகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் புதிய விதிமுறைகள் கையாளப்படும்

## திறைசேரி செயலாளர் பி.பி. ஜயசுந்தர

சர்வதேச நிதி உதவிகளை இலங்கை பெற்றுக் கொள்வது தொடர்பாக புதிய விதிமுறைகளை கையாள உள்ளதுடன் எதிர்பார்க்கப்பட்ட அரசாங்கத்தின் இவ்வாண்டிற்கான வருமான இலக்குகளை அடைய முழுக் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் திறைசேரியின் செயலாளர் பேராசிரியர் பி.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சுங்க மற்றும் கலால் திணைக்களம் தேசிய வருமான திணைக்களம் போன்று அரச நிறுவனங்களின் இலக்குகளை அடைய ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன் சர்வதேசத்தின் நிதி உதவிகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்.

கடந்தாண்டில் முன்வைக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தின் இலக்குகளை அடையக் கூடியளவு முயற்சிப்பதுடன் இதற்காக திறைசேரியின் அதிகாரிகள், தொழில்சார் நிபுணத்துவத்துடன் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் வரிசையில் இலங்கைக்கு முதலிடம்

தெற்காசிய நாடுகள் மத்தியில் மனிதவள அபிவிருத்தி சுட்டெண் வரிசையில் இலங்கைக்கு முதலிடம். ஐ.நா. சபையின் அபிவிருத்தி திட்டம் வெளியிட்டுள்ள இந்த வருடத்திற்கான மனித வள அறிக்கையில் இந்த புதிய புள்ளி விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. சர்வதேச ரீதியான இந்த சுட்டெண் வரிசையில் இலங்கைக்கு 102 ஆவது இடம் கிடைத்துள்ளது. நாட்டு மக்களின் வாழ்க்கை வளத்தை அளவிடும் முகமாக ஐ.நா. அபிவிருத்தி திட்டம் இதனை மேற் கொண்டு வருகிறது. மக்களின் ஆயுட்காலம் கல்வித்தரம் தனி மனித வருமானம் தொடர்பான தகவல்களும் இதில் அடங்குகின்றன. (ஓ)

## அவுஸ்திரேலிய அரசு

# சட்ட விரோத குடியேறிகளை தடுக்க இலங்கையில் விளம்பரம் செய்யவுள்ளது

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் சட்டவிரோத குடியேறிகளை தடுக்கும் பொருட்டு அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கையில் விளம்பரங்களை மேற்கொள்ளவுள்ளது.

இதற்கென அவுஸ்திரேலிய அரசாங்கம் பல நூறாயிரம் டொலர்களை செலவிடவுள்ளது. இந்த விளம்பரங்கள், சுவரொட்டிகள் மற்றும் வீதி நாடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

இலங்கையில் உள்ளூர் கலைஞர்களை கொண்டு நடத்தப்படும் இந்த வீதி நாடகங்களின் போது, அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் போது எதிர்கொள்ளும் ஆபத்துக்கள் குறித்து தெளிவுபடுத்தப்படவுள்ளன.

அத்துடன், அவுஸ்திரேலியாவுக்குள் சட்ட ரீதியாக எவ்வாறு பிரவேசிக்கலாம் என்பது தொடர்பாகவும் விளக்கங்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோத குடியேற்றவாசிகள் பிரவேசிப்பதன் காரணமாக அந்த நாட்டில் பாரிய அரசியல் பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதனை சாத்தியமான வழியில் தடுப்பது குறித்து அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆராய்ந்த போதே இதற்கான இந்த முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் 2007 ஆம் ஆண்டு கால பிற்பகுதியில் குடிவரவு சட்ட இறுக்கங்களை தளர்த்திய பின்னர் சுமார் 1600 க்கும் அதிகமான சட்ட விரோத குடியேறிகள் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்துள்ளனர். (ஓ-4)

## எட்டாவது ஆசிய ஒத்துழைப்பு

# கலந்துரையாடல் மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதி


(கொழும்பு)

எட்டாவது ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல் மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.


இதில் இலங்கை உள்ளிட்ட 31 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர் என வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் எட்டாவது ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல் மாநாடு எமது நாட்டில் நடைபெறுவதானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதன் தற்போதைய தலைமைப் பொறுப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (ஓ-4)




யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் பி.எஸ்.குமாரசாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டிகளின் ஆரம்பநிகழ்வில் விருந்தினர்கள் கழகக் கொடியினை ஏற்றி வைப்பதையும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக போஷகரும் யாழ் இந்துக் கல்லூரி அதிபருமான ஜீ. கணேசராசா சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பதனைய்யும் படங்களில் காணலாம்.



மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டியில் 800 மீற்றர் ஓட்டத்தில் முதலாம் இடத்தை பெற்ற கட்டுவன புலமகாவித்தியாலய மாணவன் செ. அகில்ராயை பாராட்டும் நிகழ்வில் தெல்லிப்பளைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் ச. கைலாசநாதன் பாராட்டுச் சான்றிதழ் வழங்குவதையும் அருகில் வித்தியாலய அதிபர் க. பத்மநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.



உரும்பிராய் வாணி கல்வி நிலையத்தில் இடமபெற்ற வாணி விழாவில் கலை நிகழ்வொன்றில் பங்குபற்றும் மாணவர்களைப் படத்தில் காணலாம்.



தென் இலங்கையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு ஏ9 பாதையூடாக குருநகருக்கு எடுத்து வரப்படுகின்ற றோளர் இயந்திரப் படகை படத்தில் காணலாம்.

நாய்கள் குரைக்கின்றன. ஆனால் ஒட்டகக் கூட்டம் போய்க் கொண்டிருக்கின்றது.

– அரேபியா

வலம்புரி

## இரண்டு பஞ்சாங்கம் போல் இரண்டு ஆசிரியர் தினம்

காலம் கலியுகம் அதனால் எதுவுமே சீரில்லை ஒழுங்கில்லை. முன்பெல்லாம் ஒழுங்கில் சில ஒழுங்கீனங்கள் காணப்பட்டன.

ஆனால் இப்போது ஒழுங்கீனத்தில் ஒரு ஒழுங்கை காணவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இருந்தும் எதுவுமே நிச்சயத் தன்மையற்றவையாக இருப்பது வேதனைக்குரியது.

குறிப்பாக இங்கு இரண்டு பஞ்சாங்கங்கள் வெளிவருகின்றன. இரண்டு பஞ்சாங்கம் வெளிவருவதில் எந்த விமர்சனமும் கிடையாது.

யாழ். பிராந்தியத்தில் மூன்று பத்திரிகைகள் வெளிவரும் போது–ஒரு பத்திரிகையில் பணியாற்றுபவரை இன்னொரு பத்திரிகை கவர்ந்திழுத்து கற்புடையாள் கண்ணகியின் கணவனைக் கவர்ந்திழுக்கும் மாதவியின் பண்பாட்டை கொண்டிருக்கும் போது, நாங்கள் மட்டும் இரண்டு பஞ்சாங்கம் வெளியிட்டால் என்ன என்று பஞ்சாங்க உரிமையாளர்கள் கேள்வி எழுப்பலாம்.

எனவே இரண்டு பஞ்சாங்கம் மட்டுமல்ல; இருபது பஞ்சாங்கம் வெளிவந்தாலும் அதில் எந்த ஆட்சேபனையும் கிடையாது.

அப்படியானால் எங்கு சிக்கல்–பிரச்சினை ஏற்படுகின்றதெனில் இரண்டு பஞ்சாங்கமும் தத்தம் கணிப்பில் இரண்டு சிவராத்திரி தினத்தை, இரண்டு கார்த்திகை விளக்கீட்டை, வருடப் பிறப்பில் முதல்நாள், அடுத்தநாள் என்ற வேறுபாட்டை, நவராத்திரியில் சிக்கலை ஏற்படுத்துகின்றன.

இதனால் சமய சடங்குகளில் நம்பிக்கை கொண்ட தமிழினம் பெரும் சங்கடங்களை அனுபவிக்கின்றது.

ஒரு முறை இரண்டு பஞ்சாங்கங்களும் வெவ்வேறு தினங்களை கார்த்திகை விளக்கீடாக அறிவித்திருந்தன.

இந்த வெவ்வேறு தினங்கள் ஒரு மாத வித்தியாசத்தை கொண்டிருந்தன.

இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பில் இரண்டு பஞ்சாங்க கணிப்பினரும் தத்தம் நியாயப்பாட்டை பத்திரிகை வாயிலாக வெளியிட்டனர். விவாதம் சூடு பிடித்தது. ஒரு பஞ்சாங்கம் பின்வருமாறு கூறியது, 'தாங்கள் நிர்ணயித்த தினம் தவிர்ந்த வேறு ஒரு தினத்தில் கார்த்திகை விளக்கீடு நடத்தினால் அந்த இனம் பேராபத்தை அனுபவிக்கும் தலைமை அழிவுறும். மக்கள் துன்பப்படுவர்' இவ்வாறு குறிப்பிட்டிருந்தது.

நேரம் கிடைத்தால் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை யாழ்ப்பாண பத்திரிகையில் வெளிவந்த இந்தக் கருத்துத் தொடர்பில் ஆய்வு செய்யலாம்.

ஆக, இது போன்ற கருத்துக்கள் மானிட வாழ்வின் நம்பிக்கையுடன் தொடர்பு பட்டவை. எனவே அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது தாழ்மையான கருத்து.

அட! இதைக் கூறும் போது ஒக்டோபர் 5, ஒக்டோபர் 6 என இரண்டு நாட்களை ஆசிரியர் தினமாக கொண்டாடும் வியாதிதான் பஞ்சாங்கமும் என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கவே செய்கின்றது.

# அவுஸ்திரேலியாவுக்குள் சட்ட விரோதமாக பிரவேசிப்பவர்களில் புலிகளும் இருக்கலாம்

## இலங்கை உயர்ஸ்தானிகரின் கூற்றுக்கு அவுஸ்திரேலியா மறுப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் சட்டவிரோத குடியேறிகள் மத்தியில் தமிழீழ விடுதலை புலிகளும் இருக்கலாம். என அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சேனகவல்கம் பாய தெரிவித்துள்ள குற்றச்சாட்டை அவுஸ்திரேலியாவின் உள்துறை அமைச்சர் பிரண்டன் ஓ கோனர் மறுத்துள்ளார்.

இதன் காரணமாக அவுஸ்திரேலிய சமூகத்திற்குள் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் தோன்றியுள்ளதாக வல்கம்பாய கூறியுள்ளார்.

அண்மைக்காலத்தில் அவுஸ்திரேலியாவுக்குள் வந்த சட்டவிரோத குடியேற்ற வாசிகளின் மத்தியில் ஏற்பட்ட மோதல் சம்பவங்களில் காயங்கள் ஏற்பட்டவர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளாக இருக்கலாம் என வல்கம் பாய குறிப்பிட்டுள்ளார்.

இவர்களை நாடு கடத்த வேண்டும் என கேட்டுள்ள அவர் இவர்களால் சமூகத்தில் பிரச்சினைகள் ஏற்படலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளரர்.

கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டவிரோத குடியேறிகள் உரிய முறையில் பாதுகாப்பு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 12 மாதங்களாக மேற்கொண்ட பாதுகாப்பு சோதனைகளின் போது எவரும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பது கண்டு பிடிக்கப்படவில்லை என அவர் தெரி வித் துள்ளார்.

படகு மூலம் வருபவர்கள் முதலில் சுகாதார பரிசோதனைகளுக்கும் அடையாள பரிசோதனைக்கும் பின்னர் பாதுகாப்பு சோதனைக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

இந்த நிலையில் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது என்பதை தாம் மறுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்மஸ் தீவில் தாம் சட்டவிரோத குடியேறிகளை உரிய முறையில் பராமரிப்பதாக குறிப்பிட்டுள்ள அவர் தாம் சிறுவர்களை முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் வைத்திருப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ஓ–4)

# அரியாலை கிழக்குப் பகுதி மக்களின் மீள் குடியமர்வு குறித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு ஜே/89,ஜே/90,ஜே/94 மற்றும் ஜே/61 வசந்தபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து கடந்த காலப் போர்ச் சூழலால் இடம்பெயர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்களை மீள் குடியமர்த்துவது தொடர்பிலான கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் அரியாலை சாந்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி மக்களை மீளக்குடியமர்த்துவ தற்கு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகளைக் .கவனத்தில் கொண்டு யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலாளர்களும் இக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அத்துடன் முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் கே.பத்மநாதன், 512ஆவது படைய ணியின் கட்டளைத் தளபதி மேஜர் மடுகல்ல மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளும் சமூக சேவையாளர்களும் இதன் போது சமுகமளித்திருந்தனர்.

இப் பகுதிகளில் மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு வீடுகளைப் புனரமைப்பதற்கென தலா 25ஆயிரம் ரூபாயென நிதியுதவி, ஆறு மாதகால உலர் உணவு மற்றும் வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலாளர் செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

இதேவேளை மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ள அரியாலை கிழக்கு ஜே/89,ஜே/90 கிராம சேவகர் பிரிவுகளில் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு விரைவில் அப்பகுதிக் கிராம சேவகர்கள், இடம்பெயர்ந்த மக்களை அழை த்துச் சென்று அவர்களது சொந்த இடங்களைப் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்வார்கள் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (சு)

## வடமராட்சியில் மீண்டும் 2 மணிநேர மின்வெட்டு

(வடமராட்சி)

வடமராட்சியில் கடந்த ஒரு வாரமாக மீண் டும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதனால் மாணவர்கள், மின்பாவனையாளர்கள் பலரும் அதிருப்தியடைந்துள்ளனர்.

முன்னரும் மின்வெட்டு நடைமுறையிலி ருந்தபோதிலும் கடந்த சில மாதங்களாக மின் வெட்டு சீரடைந்திருந்தது. எனினும் மீண்டும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதையடுத்துப் பலரும் கவலையடைந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இரவு 7 மணி முதல் 9 மணிவரையான இரண்டு மணித்தியாலங்கள் ஒன்று விட்ட ஒரு தினம் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் சுமுக நிலை தோன்றி வரும் வேளை மின்சாரம் சகலருக்கும் ஒரு சவாலாக இருப்பதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச–10)

## மாணவர்களுக்கான கருத்தரங்கு

(வடமராட்சி)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரின் உலக சேவை தின நிகழ்வாக உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இளைஞர் தலைமைத்துவம் என்னும் விடயம் பற்றி யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பியையா கலாமணியும் இளைஞர் நேர முகாமைத்துவம் என்னும் விடயம் பற்றி யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஆறுமுகம் சுப்பிரமணியமும் கருத்துரை வழங்கவுள்ளனர். இதன்போது கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம் வரவேற்புரையையும் தலைமையுரையை லயன் வி.எஸ்.சிவநாதன், நன்றியுரையை செயலாளர் மு.தர்மலிங்கம் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (ச–10)

## அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தை நவீன மயப்படுத்த நெதர்லாந்து உதவி

(கொழும்பு)

அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக் களத்தை நவீன மயப்படுத்த நெதர்லாந்து அரசாங்கம் உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

சட்ட மறுசீரமைப்பு மற்றும் நீதியமைச்சர் மிலிந்த மொறகொடவிற்கும் நெதர்லாந்து நீதியமைச்சருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த வாக்குறுதி அளிக் கப்பட்டுள்ளது.

அரச இரசாயன பகுப்பாய்வு திணைக் களத்தின் காலதாமதம் காரணமாக பல் வேறு முக்கிய வழக்கு விசாரணைகளுக்கு தீர்ப்பளிப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய இந்த திட்டத்தின் மூலம் சிறந்த பலனைப் பெற் றுக்கொள்ள முடியும் என அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. (ஓ–5)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மனிதன் ஆற்றல்கள்



மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு, அவர்கள் தங்களுடைய மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலின் வேற்றுமையில்தான் அடங்கியிருக்கிறது. எந்தத் துறையைச் சேர்ந்த வேலையானாலும் வெற்றி அனைத்தும் இந்த மன ஒருமைப்பாட்டின் விளைவாகவே வருகின்றன.

மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலில் மக்களுக்கு உள்ள வேற்றுமையே ஒருவனுக்கும் மற்றொருவனுக்கும் உள்ள வேறுபாடாகவும் அமைகிறது. மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள மனிதனை மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள மனிதன் ஒருவனோடு ஒப்பிட்டுப்பார் அவர்களிடையே உள்ள வேற்றுமை மனதை ஒருமுகப்படுத்தும் திறமைக்கு ஏற்பவவே அமைந்திருக்கும்.

# தொழிற் கல்வி மூலம் நவீன யுகத்தை எதிர்கொள்வோம்

கடந்த வாரங்களில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தொழில் கல்வி தொடர்பாக பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திய அறிக்கையின் விவரணமாக இக் கட்டுரை அமைகிறது. அதில் ஆறு மாதங்களுக்குட்பட்ட பயிற்சிகள் வலுவற்றது என அவர் குறிப்பிட்டிருந்தார். அப்படியாயின் தொழில் கல்வி தொடர்பான அன்றைய நிலை என்ன என்பதை ஆராய்வோம்.

யுத்த தணிவுக்குப் பின் இன்றைய சூழலில் இளைஞர் யுவதிகளுக்கான தொழில் பயிற்சி வழங்குதலில் பல்வேறு தரப்பினரும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அரசாங்க நிறுவனங்களும் அரச சார்பற்ற உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களும் தொழில் பயிற்சியை வழங்கி வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தொழில் நுட்பக்கல்லூரி இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் முதலான அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களும், கனேடிய உலகப்பல்கலைக்கழக சேவை, அறவழி போராட்டக்குழு, சர்வோதய சிரமதான சங்கம், ஊறு போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் தொழிற் பயிற்சியை முன்னின்று வழங்கி வருகின்றன.

இத் தொழில்பயிற்சிகளை ஒருங்கிணைத்துக் கண்காணிப்பதற்கென யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் திட்டமிடல் பிரிவுடன் இணைந்ததாய் தொழிற்பயிற்சிக் கண்காணிப்புக் குழு ஒன்று செயற்பட்டு வருகிறது.

தொழிற்பயிற்சி என்றவுடன் மாணவர் சமுதாயம் விளம்பர நலச்சீர்த்திட்ட கவர்ச்சித் தன்மைகளால் கட்டுண்டு அள்ளுண்டு போகிறது. இதனால் தரமற்ற தொழிற்பயிற்சி நோக்கிய அலை ஒன்று ஏற்படுகிறது. மாணவர்களும் பெற்றோரும் ஏமாற்றப்படுகிறார்கள். மாணவர்கள் பயனற்ற காகிதச் சான்றிதழுடன் தொழில் திறன் முழுமையின்றி தொழில் தேடி அலைகிறார்கள்.

அன்புக்குரிய மாணவர்களே!
பெருமைக்குரிய பெற்றோர்களே!

தொழிற்கல்வி என்றவுடன் சீர் தூக்கி பாருங்கள், நீங்கள் பயிலும் தொழிற்கல்வி.

- சுய தொழில் வாய்ப்பை உண்டாக்குமா?
- பட்டதாரி வரையான தொடர் கல்வி வாய்ப்பையாவது உண்டாக்குமா?
- அரசாங்க வேலைவாய்ப்பை பெற்றுத் தருமா?
- கல்வியற் கல்லூரி போன்ற அனுமதியைப் பெற்றுத்தருமா?
- ICTAD போன்ற அமைப்புகளில் பதிவுத் தகைமையைப் பெற்றுத்தருமா?
- இறுதியாக வெளிநாட்டு வேலைவாய்ப்பையாவது பெற்றுத் தருமா?

விரிவு கருதி ஏனைய விடயங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது . இல்லையேல் உங்களது தொழிற் கல்வி தெரிவு பயனற்றதாகும்.

இன்றைய யுகம் தொழில்களின் யுகம் ஆகும். எனவே சரியான தொழிற்கல்வியை கற்றால் மட்டும் போதாது சரியாகவும் கற்க வேண்டும் அவ்வாறாயின் தொழிற்கல்வித் தெரிவு எவ்வாறு இடம்பெறவேண்டும்?

- நீங்கள் தெரிவு செய்யும் நிறுவனம் இலங்கை அரசின் அங்கீகாரம் பெற்றதா?
- மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) பதிவை குறித்த தொழில்துறைக்கு கொண்டுள்ளதா?
- மேற்படி ஆணைக்குழுவின் பாட அங்கீகாரத்தை (Course Accriditation) கொண்டுள்ளதா?
- தேர்ச்சி மட்ட பாடத் தொகுதிகளை கொண்டுள்ளதா? (CBT)
- தேசியதிறன் தூ நியம பாட பொதியாக்க அலகை கொண்டுள்ளதா?
- தேசிய தொழில்திறன் சான்றிதழை கற்று முடித்த பின் வழங்குகிறதா?(NVQ)

இவ்வாறான நிலைமை காணப்படாவிடின் நீங்கள் தொழிற்கல்விக்காய் தெரிவு செய்த நிறுவனம் சரியானதல்ல. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்தை கொண்டதாகவும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை கொண்டதாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்கல்வி நெறியைப் பின்பற்றுங்கள். எதிர்காலத்தில் உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் தொழில்வாய்ப்பை பெற இதுவே சிறந்த வழிமுறையாகும்.

ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்கல்வி என்னும் பதம் தேசிய தொழில் திறன் கல்வி முறை (NVQ-National Bocational Qualification System) என்பதைக் குறிக்கிறது. இக் கல்வித்திட்டம் முதன் முதலில் 1980களில் இங்கிலாந்தில் உதயமானது. இங்கிலாந்தில் 1980களில் ஒரே தொழில் செய்யும் பல பிரதேசங்களை சேர்ந்தவர்களிடம் ஆய்வு நடாத்தப்பட்டது. அவர்களின் தொழில் திறனில் மாறுபட்ட தன்மைகள் காணப்பட்டன. அவர்களிற் சிலர் மிக உயர்ந்த தொழிற்திறனை கொண்டிருக்க பலர் குறைவான தொழிற்திறனையும் கொண்டிருந்தார்கள்.

இது அபிவிருத்தியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்துகிறது என உணர்ந்த இங்கிலாந்து அரசாங்கம் இது தொடர்பாக ஆராய மனிதவலு அபிவிருத்தி ஆணைக்குழு ஒன்றை உருவாக்கியது. இவர்கள் 6 வருடங்களாக ஆராய்ந்து எல்லா இடங்களிலும் வேறுபட்ட பாடத்திட்டம் கையாளப்படுவதே தொழிற்றிறன் வேறுபாட்டுக்கு காரணம் என உரைத்து நாடு முழுவதும் ஒரே பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தினால் இப்பிரச்சினை தீரும் என உரைத்தார்கள். அதன்படியே இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தப்பட்ட (NVQ) பல நன்மைகளை தந்தது.

நாட்டின் அபி விருத்ததியிலும் பாரிய முன்னெற்றங்கள் ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்து 1988 இல் அவுஸ்திரேலியா (NVQ)ஐ அறிகமும் செய்தது. தொடர்ந்து வளர்ச்சி அடைந்த நாடுகள் பலவும் வளர்முக நாடுகள் பலவும் (NVQ) ஐ அறிமுகம் செய்தன.

2005இல் இலங்கையில் அறிமுகம் ஆகிய (NVQ , WUSC) நிறுவனத்தின் தீவிர முயற்சியால் 2008இல் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. பெரும் பொருட் செலவில் தரமுகாமைத்துவ முறை (CBT , NVQ, NSS) போன்றவை தென்பகுதி வளவார்களைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் நடாத்தியது.

இதனடிப்படையில் கிளைத்தெழுந்த இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையானது வட இலங் கையில் முதன் முதலாக 2009 (NVQ) மதிப்பீடுகளை நிகழ்த்தி கணனி , «¾B Vï D \ «ØØÃV¤ I B_ , கட்டட நிர்மாணம்,வீட்டு மின் வினைஞர் தொழில் கற்கை நெறிகளுக்கு 27.07.2009 NVQ- III, NVQ -II மட்ட சான்றிதழ்களை வழங்கியுள்ளமை கவனத்திற்குரியதாகும்.

**இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை**
**375, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்**

NVQ தொழிற் கல்வியானது இலங்கையின் தொழிற்கல்வி தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட தேசிய சான்றிதழைக் கொண்ட கற்கை நெறியாகும். இது இலங்கையில் 7 மடங்களைக் கொண்டதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. I, II, III, IV மட்டங்கள் சான்றிதழ் மட்டங்களாகும். Vம் மட்டம் டிப்புளோமா மட்டமாகும். VIம் மட்டம் தேசிய டிப்புளோமா மட்டமாகும். VIIம் மட்டம் பட்டதாரி மட்டமாகும். தொழிற்கல்வியூடாகக் கூட ஒருவர் பட்டதாரியாகலாம். அது மாத்திரமல்லாமல் இம் மட்டங்களை ஒருவர் இலங்கையின் எப்பாகத்திலும் உலகத்தின் எப்பாகத்திலும் தொடர முடியும்.

**தேசிய தொழில்சார் தகமை மட்டங்களாவன.**

தேசிய சான்றிதழ் மட்டம் 1
தேசிய சான்றிதழ் மட்டம் 2
தேசிய சான்றிதழ் மட்டம் 3
தேசிய சான்றிதழ் மட்டம் 4
தேசிய டிப்ளோமா மட்டம் 5
தேசிய டிப்ளோமா மட்டம் 6
பட்டப்படிப்பு மட்டம் 7

# இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த மக்களை விடுவித்து அநாதைகளாக தவிக்க விட்டுள்ளது அரசு

## ஐ.தே.க.எம்.பி. ஜெயலத் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த மக்களை விடுவித்து அவர்களை நடுத்தெருவில் அநாதைகளாக அரசாங்கம் தவிர்க்க விட்டுள்ளது.

அரசாங்கத்தின் இத்த கைய செயற்பாட்டினை கண்டிக்கின்றோம் என்று ஐ. தே. கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

அடுத்த வாரம் ஜெனீவா சென்று அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகரையும் மனித உரிமை ஆணையாளரையும் சந்தித்து அகதிகள் விவகாரம் தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

வவுனியா மெனிக் பாம் முகாமிலிருந்து விடுவிக்கபட்பட்ட மக்கள் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளமை தொடர்பாக தெளிவுபடுத்துகையிலேயே டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன எம்.பி இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறிய தாவது,

தமிழ் மக்கள் எமது சகோதரர்கள் அவர்களுக்கு சம அந்தஸ்து வழங்கப் பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடிக்கடி மேடை களில் கூறிவருகிறார். ஆனால் இவையெல்லாம் உண்மையில்லை. வெறுமனே மேடைப் பேச்சுக்களே ஆகுமென்பதற்கு இடைத் தங்கல் முகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தமிழ் மக்களை முகாம்களிலிருந்து விடுதலைசெய்து விட்டோம் என பிரசார இயந்திரத்தை முடுக்கிவிட்டு சர்வதேச சமூகத்தை அரசாங்கம் ஏமாற்ற முனைகிறது.

கர்ப்பிணித்தாய்மார்கள், சிறுவர்கள், முதியவர்களென 200க்கு மேற்பட்டோரை முகாம்களிலிருந்து விடுவித்து அவர்களை மீளக் குடியேற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காது நடுத்தெருவில் பிச்சைக் காரர்களைப் போல் அநாதைகளாக்கியுள்ளனர்.

அரசாங்கமும் அதிகாரிகளும் தமிழ் மக்களை மாற்றாந் தாய் மனப்பான்மையுடனே நடத்துகின்றனர். எனவே தான் நாட்டின் பிரதான எதிர்கட்சியான நாம் இடம்பெயர்ந்த மக்களைப் பார்வையிடுவதற்கும் உதவிகளை வழங்குவதற்கும் சந்தர்ப்பத்தைக் கோருகின்றோம்.

ஆனால் அரசாங்கம் இதற்கு இடமளிக்காது தடைபோடுகிறது. இது தொடர்பில் சர்வதேச நாடுகளும்கவனம் செலுத்தி வருகின்றன.

அடுத்த வாரம் ஜெனீவாவிற்கு விஜயத்தை மேற்கொள்கிறேன். இதன் போது ஐ. நாவின் அகதிகளுக்கான ஆணையாளரையும் மனித உரிமைகள் தொடர்பான ஆணையாளரையும் சந்தித்து தமிழ் மக்களின் துயரங்களை எடுத்துரைக்கவுள்ளேன். தமிழ் மக்களின் இன்னல் களைக்களைவதே எனது இந்த விஜயத்தின் நோக்கமாகும் என்றார். (ஓ-4)

## இலங்கையுடன் ஐரோப்பிய ஒன்றியம் உறவுகளை தொடரும்

(கொழும்பு)

ஜி.எஸ்.பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் சர்ச்சைகள் உள்ள நிலையிலும் இலங்கையுடனான' உறவுகள் தொட ருமென ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவு குழுவின் தலைவர் பேர்னாட் சவேஜ் தெரி வித்துள்ளார்.

சீ.ஐ.ம.ஏ. வர்த்தகக் கூட்டத் தொடரில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

அண்மைக் காலமாக இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் நிலவி வரும் கருத்து முரண் பாடுகள் உறவுகளைப் பாதிக்காது என சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. (ஓ-4)




அகில இலங்கை திருமுறை மன்றம் அண்மையில் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி அரசடிப்பிள்ளையார் ஆலயத்தில் நடத்திய திருமுறைப் பெருவிழாவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மன்றம் நடாத்தும் பண்ணிசை பயிற்சி வகுப்பில் கலாபூஷணம் துறை இசை ஆதீன திருமுறைத்தோன்றல் கே.எஸ். ஆர்.திருஞானசம்பந்தரிடம் பண்ணிசை பயிலும் மாணவர்களது பன்னிசைக் கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருப்பதை படத்தில் காணலாம்.

# ஐ.சி.சி.சம்பியன்ஸ் தொடரில் ஆஸி. இரண்டாவது முறையாக சம்பியன்

## நியூசிலாந்து அணியை வீழ்த்தி சாதித்துக் காட்டியது

(சென்சூரியன்)

வோட்ஷனின் பொறுப்பான சதத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி சம்பியன்ஸ் தொடரில் கிண்ணத்தை சுவீகரித்து மீண்டும் ஒருமுறை சாதித்துக் காட்டியது.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி ஐ.சி.சி. சம்பியன்ஸ் தொடரில் தொடர்ந்து இரண்டாவது முறையாக சம்பியனானது. எட்டு அணிகள் மோதும் ஐ.சி.சி. சம்பியன்ஸ் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வந்தது.

இதில் இலங்கை, இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் முதல் சுற்றுடன் விரைவாக வெளியேறியது. அரையிறுதியில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி நியூசிலாந்து அணியும் இங்கிலாந்து அணியை வீழ்த்தி அவுஸ்திரேலிய அணியும் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

இந்நிலையில் அவுஸ்திரேலிய-நியூசிலாந்து அணிகள் மோதும் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் சென்சூரியனில் நடைபெற்றது.

இப் போட்டியில் நியூசிலாந்து அணித் தலைவர் டானியல் விக்டோரி காயம் காரணமாக அணியில் இடம் பெறவில்லை. அவருக்குப் பதிலாக ஜீதன் படேல் வாய்ப்புப் பெற்றதுடன் அணித்தலைவர் பொறுப்பை பிரண்டன் மக்குலம் ஏற்றார்.

எனினும் அவுஸ்திரேலிய அணியில் மாற்றமில்லை. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் திணறியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் அணித்தலைவர் பிரண்டன் மக்குலம் 14 பந்துகளை வீணடித்து பூச்சியத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த ரெட்மோண்ட்-குப்தில் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

எனினும் இந்த ஜோடியைப் பிரிக்க அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் சுழல்பந்து வீச்சாளர் ஹயூரிச்சை அழைத்தார்.

இதற்கு கைமேல் பலன் கிடைத்தது. ஹயூரிச்சின் பந்துவீச்சில் ரெட்மோண்ட் 45 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 26 ஓட்டங்களுடனும் குப்தில் 64 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 40 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்துவந்த ரெய்லர் 06 ஓட்டங்களுடனும் எலியோட் 09 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேற நியூசிலாந்து அணி 26.4 ஓவர்களில் 94 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

இந்நிலையில் 6ஆவது விக்கெட்டுக்காக இணைந்த புரூம்-பிரங்லின் ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்கும் பணியில் ஈடுபட்டது.

இந்த ஜோடியின் நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து 40 ஓவர்களில் 150 ஓட்டங்களை எட்டியது,

இதில் புரூம் 62 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 37 ஓட்டங்களையும் பிரங்லின் 43 பந்துகளில் (4 பவுண்டரிகள் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து வந்த வீரர்கள் தமது பங்குக்கு பிரகாசிக்க நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 200 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பட்டேல் 16 ஓட்டங்களையும் பொன்ட் 3 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்துவீச்சில் ஹயூரிச் 3 விக்கெட்டுக்களையும் பிரெட் லீ 2 விக்கெட்டுக்களையும் சிடில், ஜோன்ஸன் ஆகியோர் தலா ஒரு விக் கெட்டையும் வீழ்த்தினர்.




பதிலுக்கு 50 ஓவர்களில் 201 ஓட்டங்கள் என்றவெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் பெய்ன், அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் ஆகியோர் தலா ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேற அவுஸ்திரேலிய அணி 2.2 ஓவர்களில் 06 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த வோர்ட்ஷன்-வைற் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அவுஸ்திரேலிய அணியை சரிவிலிருந்து மீட்டது.

இதில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய வோட்ஷன் 74ஆவது பந்தில் அரைச்சதம் கடக்க அவுஸ்திரேலிய அணி 28.3 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

மறுமுனையில் வைற்றும் 87-வது பந்தில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்த ஜோடி 2-வது விக்கெட்டுக்காக 100 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தது. எனினும் கமறூன் வைற் 102 பந்துகளில்(7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 62 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய மைக்கெல் ஹசி 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 38.3 ஓவர்களில் 156 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய ஹோப்ஸ் வோட்ஷனுக்குச் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினார். இதில் ஷேன் வோட்ஷன் 129 பந்துகளில் சதத்தைப் பூர்த்தி செய்ய அவுஸ்திரேலிய அணி 45.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 206 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதில் ஷேன் வோட்ஷன் சதம் கடந்த விதம் சுவாரசியம் ஆனது. 46-வது ஓவரில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கும் வோட்ஷனின் சதத்திற்கும் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

ஜீதன் பட்டேல் வீசிய முதல் பந்தில் சிக்சர் விளாசிய வோட்ஷன் 99 ஓட்டங்களை எடுத்தார். அடுத்த பந்தையும் சிக்ஸருக்கு அனுப்பிய வோட்ஷன் சதம் கடந்ததோடு அவுஸ்திரேலிய அணியின் வெற்றியையும் உறுதி செய்தார்.

இதில் வோட்ஷன் 129 பந்துகளில் (10 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 105 ஓட்டங்களையும் ஹோப்ஸ் 22 பந்துகளில் (4பவுண்டரிகள் உட்பட) 22 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் மில்ஸ் 3 விக்கெட்டுக்களையும் பொன்ட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றியை உறுதி செய்த வோட்ஷன் ஆட்ட நாயகனாக தெரிவானதுடன் அணித் தலைவர் பொன்டிங் தொடர் நாயகன் விருதை வென்றார்.

**துரத்திய காயம்**

சம்பியன்ஸ் தொடரில் நியூசிலாந்து வீரர்களைக் காயம் துரத்தியது. ஜேக்கப் ஓரம், ஜெசி ரைடர், டேரல், தொபி போன்றவர்கள் காயத்தால் பாதியில் விலகினர். முதல் போட்டியில் உடல் பாதிப்புக் காரணமாக இயன் பட்லர் பங்கேற்கவில்லை.

கடந்த இரு போட்டிகளில் கிராண்ட் எலியோட் கட்டை விரல் காயத்துடன் விளையாடினார். இதன் உச்சக்கட்டமாகத் தொடைப் பகுதியில் ஏற்பட்ட பிடிப்புக் காரணமாக மிக முக்கியமான இறுதிப் போட்டியில் அணித் தலைவர் விக்டோரி இடம்பெற இயலவில்லை.

பாகிஸ்தானுக்கு எதிரான அரையிறுதியில் 3 விக்கெட் வீழ்த்திய இவர், 41 ஓட்டங்கள் எடுத்து சகல துறை வீரராக ஜொலித்தார். சென்சூரியன் ஆடுகளம் சுழலுக்கு ஒத்துழைக்கும் நிலையில் அவர் இல்லாதது அவுஸ்திரேலிய அணிக்குச் சாதகமாக அமைந்தது.

நேற்று முன்தினம் களத் தடுப்புச் செய்த போது கணுக்காலில் காயமடைந்த அவுஸ்திரேலிய வீரர் பெர்கியூசன் பாதியில் வெளியேறினார். இவருக்குப் பதில் வோக்ஸ் களத் தடுப்புச் செய்தார்.

**ஈசல் தொல்லை**

உணவு இடைவேளையின்போது மைதானத்தில் ஆயிரக் கணக்கான ஈசல்கள் பறந்தன. இதனால் அவுஸ்திரேலிய அணி துடுப்பாட ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. மைதானப் பணியாளர்கள் ஒரு வழியாக ஈசல்களை விரட்டியடித்தனர். இதற்குப் பின் போட்டி வழக்கம்போல் நடந்தது.

**ஹாட்லியை முந்திய மில்ஸ்**

நேற்று முன்தினம் ஹசியை வெளியேற்றிய கைல் மில்ஸ் (108 போட்டி, 59 விக்கெட்டுக்கள்) ஒரு நாள் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்திய நியூசிலாந்து வீரர்களின் வரிசையில் 4-வது இடத்துக்கு முன்னேறினார்.

நேற்று 3 விக்கெட்டுக்களை வீழ்த்திய இவர், ஹாட்லியை (158 விக்கெட்டுக்கள்) முந்தினார். இப் பட்டியலில் விக்டோரி (243 விக்கெட்டுக்கள் வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார்.

**ஆறாவது கோப்பை**

ஒரு நாள் போட்டிகளில் தங்களை அசைக்க முடியாது என்பதில் அழுத்தமாக நிரூபித்துள்ளது உலக சம்பியன் அவுஸ்திரேலிய அணி.

சம்பியன்ஸ் தொடரை வென்றதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) சார்பில் நடத்தப்படும் உலகக் கோப்பையை 4 முறையும் (1987, 1999, 2003, 2007) மினி உலகக் கோப்பை (சம்பியன்ஸ் தொடர்) தொடரில் இரண்டு முறையும் (2006, 2009) கோப்பை வென்றுள்ளது.

கடந்த 2006 ஆண்டு நடந்த சம்பியன்ஸ் தொடர் இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியது. இதுவரை இருபது-20 உலகக் கோப்பையை மட்டும் அவுஸ்திரேலிய அணி வெல்லவில்லை.

கடந்த 2000 இல் சம்பியன்ஸ் தொடரை வென்ற நியூசிலாந்து அணி இம்முறை இறுதிப் போட்டியில் ஏமாற்றியது.

**மீண்டும் நம்பர் - 1**

சம்பியன்ஸ் தொடர் ஆரம்பமாகும் போது ஐ.சி.சி. ஒரு நாள் போட்டிக்கான தரவரிசைப் பட்டியலில் 3-வது இடத்திலிருந்தது அவுஸ்திரேலியா. நேற்று முன்தினம் கோப்பை வென்தன் மூலம் 128 புள்ளிகளுடன் மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறியது.

இந்தியா (124 புள்ளி) இரண்டாவது இடத்தில் உள்ளது. தென்னாபிரிக்கா (121 புள்ளி) மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது.

# சம்பியன்ஸ் தொடரில் சூதாட்டம்? யூனிஸ்கான், அலாமுக்கு சம்மன்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அணித்தலைவர் யூனிஸ்கான்-பயிற்சியாளர் இந்திகாப்அலாம் ஆகியோருக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த முடிபை அறிவித்துள்ளது. சமீபத்திய சம்பியன்ஸ் தொடரில் கிரிக்கெட் சூதாட்டம் நடந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**முக்கிய பிடியை தவிர்த்தார் யூனிஸ்**

தென்னாபிரிக்காவில் ஐ.சி.சி.சம்பியன்ஸ் கிரிக்கெட் தொடர் நடந்தது. போட்டியில் இந்தியா அரையிறுதி வரை கூடமுன்னேற முடியவில்லை. அரையிறுதி போட்டிவரை முன்னேறிய பாகிஸ்தான், நியூசிலாந்து அணியிடம் தோற்றது. இதனால் இறுதிப் போட்டிக்குள் நுழையும் வாய்ப்பை பாகிஸ்தான் இழந்தது. இந்த போட்டியில் ஒரு முக்கியமான சாதாரணமாக பிடிக்கக்கூடிய (நியூசி. வீரர் கிராண்ட் எலியோட் அடித்தபந்து) பிடியைக்கூட பிடிக்காமல் யூனிஸ்கான் தவிர்த்து விட்டார். இது இறுதி போட்டி வாய்ப்பை இழந்ததாக பரபரப்பாக கூறப்பட்டது.

இந்த விவகாரத்தை கையில் எடுத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் அணி பயிற்சியாளர் இண்டிகாப்அலாம், அணித் தலைவர் யூனிஸ்கான் ஆகியோர் இருவருக்கும் சம்மன் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது. கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக இருவரையும் அணியில் இருந்து நீக்குவதாக பரபரப்பான செய்தி முதலில் பாகிஸ்தானில் இருந்து வெளியானது என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசின் மீள் குடியேற்ற நடவ...

அவர் மேலும் கூறியதாவது,

ஓர் முகாமிலிருந்து மற்றொரு முகாமிற்கு இடம் நகர்த்தும் செயற்பாடே நடைபெற்று வருகிறது. எதிர் காலத்தில் பெய்யவுள்ள கடுமையான மழைக் காலத்தில் அகதி முகாம் மக்கள் பாரிய அபாயங்களை எதிர் நோக்குவர்.

நிலக்கண்ணி வெடிகளை அகற்றுதல் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பிரித்தானியா நிதி உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து திருப்தியடைய முடியாது.

மக்களை மீளவும் தமது சொந்தக் கிராமங்களில் மீளக் குடியேற்ற காட்டப்படும் சிரத்தை ஏமாற்ற மளிக்கும் வகையில் அமைந்துள்ளது. அகதிகளின் சுதந்திர நடமாட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

அகதி முகாம்களில் நிலைமைகள் அபிவிருத்தி அடைந்துள்ள போதிலும் எதிர்வரும் பருவப் பெயர்ச்சி மழைக் காலத்தில் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடலாம் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஓர் முகாமிலிருந்து மற்றுமொரு முகாமிற்கு மக்களை இடம்நகர்த்தும் செயற்பாடு ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தவருட இறுதிக்குள் பெருந்தொகையான அகதிகளை மீள் குடியேற்ற முடியும் என்ற அரசாங்கத்தின் வாக்குறுதி வரவேற்கத் தக்கதென அவர் குறிப்பிட்டுள்ளார். மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக 4.8 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# முகாம்களுக்...

செய்த பிரிட்டிஷ் அமைச்சர் மைக் பொஸ்டர், அங்கு கடுமையான மழை பெய்தால் பெரும் அழிவும் தொற்றுநோய் பரவலும் ஏற்படும் என்று அச்சம் வெளியிட்டுள்ளார். இதேவேளை வவுனியா இடைத்தங்கல் முகாம் களில் உள்ளவர்களுக்கான உதவியை ஐக்கியராச் சியம் நிறுத்தினாலும் வேறுபல நாடுகள் இலங்கைக்கு தொடர்ந்து உதவ தயாராக இருப்பதாகவும் இந்த முடி பால் தாம் கவலைப்படவில்லை என்றும் இலங்கை சமா தானச் செயலகத்தின் பணிப்பாளர் ரஜீவ விஜய சிங்க பி.பி.சியின் சிங்கள சேவையான சந் தேசி யாவிடம் தெரிவித்தார். (ச-5,14)

# பிரித்தானிய...

பிரித்தானிய உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் உதவித்திட்டங்களை பார் வையிடுவ தற்காக அவர் வருகைதந்துள்ளார் என பிரித்தானிய தூதரக அறிக்கை கூறுகின்றது.

இந்தப் பயணத்தின் போது அரசின் முக்கிய தலைவர்கள் மற்றும் ஐ.நா அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம் விடுத்துள்ள அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது. (ச-5)

# யாழ்ப்பாணத்...

இதேவேளை யாழ். வணிகர் கழகத்தினால்சிபார்சு செய்யப்பட்ட 25 லொறிகளின் முதற்கட்டமாக 10 லொறிகள் நாளை காலை 10 மணிக்கு தெல்லிப் பழையில் வைத்து தகைமைச் சான்றிதழ் பெறுவதற்காக படையினரிடம் கையளிக்கப்படுமென அரச அதிபர் தெரிவித்தார். இவ்வாறு கையளிக்கப்படும் லொறிகள் உயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து பரிசீலிக்கப் பட்டு தகைமைச்சான்றிதழ் வழங்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

# ‘எங்களை இங்கிருந்து மீட்டு...

எம்மை மீட்டு விடுங்கள் என அவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா முகாம்களிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரிட்டனின் மேம்பாட்டுத்துறை துணை அமைச்சர் மைக் பொஸ்டர் உடனான கலந்துரையாடலின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். அம் மக்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு,

**ஒரு கூடாரத்துக்குள் 5 குடும்பம்**

நாம் இராமநாதன் முகாமிலிருக்கின்றோம். இங்கு ஒரு கூடாரத்திற்குள் நான்கு, ஐந்து குடும்பங்கள் இருக்கின்றோம். சரியான கஷ்டம். தண்ணிப் பிரச்சினை, சாப்பாட்டுப் பிரச்சினை உள்ளது. ஒழுங்கான மருத்துவ வசதி இல்லை. பள்ளிப்பிள்ளைகளிற்கு கொட்டில் உள்ளது. அவையும் காற்றிற்கு விழுந்துவிட்டது. இந்தத் தறப்பாள்களுக்குள் இருப்பதால் நோய் ஏற்படுகிறது. எங்களால் இங்கு இருக்கமுடியாது. எவ்வளவு விரைவாக எங்களை எமது சொந்த இடங்களிற்கு அனுப்ப முடியுமோ அனுப்பிவையுங்கள்.

நாங்கள் 2006 ஆம் ஆண்டு மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்து பத்து பதினைந்து இடங்களில் குடியமர்ந்து தற்போது இங்கு வந்துள்ளோம். இப்படி எல்லாம் அவதியுற்று வந்த நாங்கள் ஒரு கூடாரத்திற்குள் 24 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளோம். எங்களை எங்கள் ஊர்களில் விட்டுவிடுங்கள். புண்ணியமாக இருக்கும்.

**அரிசியிருக்கு பருப்பு இருக்கு சட்டியில்லை பானையில்லை**

அரிசியையும், மாவையும், பருப்பையும் தந்து விட்டு சமைத்துச் சாப்பிடுங்கள் என்றால் எவ்வாறு சமைப்பது? சட்டிபானை இல்லை. நீர் இல்லை. அரிசியையும் பருப்பையும் வறுத்தா நாங்கள் சாப்பிடுவது?

முகாமில் தொற்றுநோய்களும் ஏற்பட்டுள்ளன. அம்மாள் வருத்தம்,செங்கண்மாரி, நெருப்புக்காய்ச்சல், தைபொயிட் என நோய்கள் வருகிறது. குடிசைக்குள் அடுப்பு மூட்ட முடியாது. தீபரவி எல்லாமே எரிந்துவிடும். எரிக்கும் வெய்யிலில்தான் அடுப்பு மூட்டுகி றோம். இந்தளவு கொடுமையில் நாங்கள் வாழ்கி றோம். ஏன் எங்களைச் சித்திரவதை செய்கிறீர்கள்? அந்த ஆற்றுத் தண்ணியைப் பாருங்கள் அந்த ஆற் றுத் தண்ணியில் மனிதர்கள் குளிக்க முடியுமா? எரு மைமாடு குளிக்கிற தண்ணி அது. அதிலதான் நாங்கள் குளிக்கிறோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-14)

# ஐ.தே.க. வேட...

திஸ்ஸ அத்தநாயக்கா தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார். உதய திஸாநாயக்க என்ற வேட்பாளரே தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரச தரப்பு வேட்பாளர்கள் தொடர்ச்சியாக தாக்கி வருவதாக திஸ்ஸ அத்தநாயக்கா தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கட்சியின் புத்தள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கபண்டாரவின் வீடும் அலுவலகமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்கப்பட்டமை குறித்தும் திஸ்ஸ அத்த நாயக்கா தனது முறைப்பாட்டில் சுட்டிக் காட்டியுள்ளார். (ச-5)

# கூட்டமைப்பின் 4 எம்.பிக்களு...

போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.வி.தவராசா இது குறித்து ஆட்சேபனை தெரிவித்து சட்டவாதங்களை முன்வைத்தார்.

அரசியல் அமைப்பின் 157 ஆவது பிரிவின் கீழ் நாட்டைப் பிரிப்பதற்கு அனுசரணை வழங்கும் வகையில் குற்றம் ஒன்றை புரிந்திருப்பதாக இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக இந்த வழக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் தொடரப்பட்டு இருந்தது.

பின்னர் இது குறித்து விசாரணை செய்வதற்கு, அரசியல் அமைப்பு தொடர்பான விடயம் என்ற படியால் அதி காரமுள்ள நீதிமன்றம் இது வல்லவென்றும் அதற்கான நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்றும் சட்டத்தரணி தவராசா முன்னர் ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

இதனைத்தொடர்ந்து குற்றவியல் சட்டத்தின் 120 ஆம் பிரிவின் கீழ் நாட்டுக்குள் வேறொரு நாடு ஒன்றிற்காக அனுசரணை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக பின்னர் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் குற்றச்சாட்டுக்களை திருத்தம் செய்திருந்தனர். இது குறித்து வாதாடிய சட்டத்தரணி தவராசா நீதிமன்றத்தில் இவ்வாறான நாட்டுக்கு வெளியே வெளிநாடுகளில் செய்யப்பட்ட உரைகள் தொடர்பாக குற்றவியல் சட்டத்தைக் கொண்டு இலங்கை வழக்குத் தொடர முடியாது என்றும் இலங்கையில் வழக்கு தொடர இலங்கை நாட்டு மண்ணுக்குள் குற்றம் புரிந்திருக்க வேண்டும் என்று சட்டம் வலியுறுத்துவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதன்படி இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்து அவர் கள் நிரபராதிகளாக காணப்படுகின்றமையால் அவர்களை விடுதலை செய்யுமாறும் சட்டத்தரணி நீதிமன்றத்தை கோரினார். இது குறித்து ஆராய்ந்து பிரதம நீதவான், சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் முன் வைக்குமாறு அரச சட்டத்தரணிக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு எதிர்வரும் நவம்பர் 3 திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இதேவேளை 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி ஜேர்மன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நடைபெற்ற பொங்கு தமிழ் வைபவங்களில் ஆற்றிய உரை தொடர்பாகவே இந்த வழக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# அமெரிக்க அரசுக்கு எதி...

ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கருகில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் மற்றும் மேல் மாகாணசபை அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோரின் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது இராணுவ கண்காட்சியை பார்வையிட சென்றவர்கள் இந்த கையெழுத்து வேட்டையிலும் கைச்சாத்திடும் வகையில் ஜாதிக ஹெல உறுமய அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. இந்த கையெழுத்து வேட்டையின் போது பலர் இதில் தமது கையெழுத்துக்களையிட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் மேல்மாகாண சபை அமைச்சர் உதய கம்மன்பில, இலங்கை அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காகவும் இலங்கை மீது அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலுமே மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்ற பதத்தினை கையிலெடுத்துள்ள தாகவும் ஆனால் உலக வரலாற்றில் அதிகளவில் மனித உரி மைகளை மீறியது அமெரிக்காவே என குறிப்பிட்டார்.

ஆனால் அமெரிக்காவின் இந்த மீறல்களை எந்த நாடும் எந்த அமைப்பும் தட்டிக் கேட்காத படியினால் அமெரிக்கா இன்று மனித உரிமை மீறல்களை மறைத்து தனது குற்றங்களை பொக்கற்றில் போட்டுக் கொண்டு சிறிய நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு அந்த நாட்டின் அரசாங்கத்தை வீழ்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

அமெரிக்க வரலாற்றை எடுத்துப்பார்த்தால் அவர்கள் இலட்சக்கணக்கில் செவ்விந்தியர்களை கொலை செய்தே வளர்ந்து வந்தார்கள் எனவும் அதனைத்தொடர்ந்து கறுப்பு ஆப்பிரிக்க இனத்தினரை தடை செய்ததுடன் அங்கு பாரிய மனித உரிமை மீறல்களை மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து இரண்டாம் உலக போரின் போது ஜேர்மன் டிறஸ்டேன் நகரின் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தி ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேரைக் கொன்றதுடன் ஜப்பானில் நடத்தப்பட்ட அணுகுண்டுத் தாக்குதல்களினால் 2 இலட்சத்து 40 ஆயி ரம் பேரைக் கொன்றதாகவும் ஆப்கானிஸ்தான் யுத்தத்தின் போது இரசாயன குண்டுகளை பயன்படுத்தியதாகவும் குற்றம் சாட்டிய அவர் உலகத்தில் பாரிய அளவில் மனித உரிமைகளை மீறுவது அமெரிக்காவே எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அமெரிக்காவிற்கு யாரும் சவால் விடுவிக்கவில்லை என தெரிவித்த அவர் இவ்வாறான மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் அமெரிக்கா விற்கு எதிராக விசாரணை ஆணைக்குழு வொன்றை நியமித்து அவர்கள் மீது விசாரணை நடத்தும் படியும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலுமே தாம் இந்த கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளதாக குறிப்பிட்டார். (ச-5)


உடுவில் சமூகத்தின் உளம் கனிந்த நன்றிகள்



கலங்கியிருந்த எம் உள்ளம்
தெளிவடைய,
உடுவில் மகளிர் கல்லூரி
பண்பாட்டு விழுமியங்கள்
சிதைவுறாது
பரிந்துதவி எமக்கு வசந்தத்தைத்
தந்த எமது வடக்கின் வசந்த
நாயகன் அமைச்சர்
கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா
(அமைச்சர், சமூகநலத்துறை, சமூக சேவைகள் அமைச்சு,
செயலாளர் நாயகம், ஈழமக்கள் ஜனநாயக கட்சி)
அவர்களுக்கு எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.
பழைய மாணவர்கள்
உடுவில் மகளிர் கல்லூரி.
(3743)



ஆங்கில மற்றும்
தகவல் தொழில்நுட்ப வருடம்
2009
இவ் வருடத்தின் மிகப்
பிரமாண்டமான நிகழ்வு
இலங்கையின் முதற்தர
‘சமகால தகவல் தொழில்நுட்ப நூல் வெளியீடும்,
தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கும்’



இடம் :-யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி
விவேகானந்தா மண்டபம்
காலம் :-10.10.2009 சனிக்கிழமை
நேரம் :-காலை 10.00 மணி
(C-3448)
‘சமகால தகவல் தொழில்நுட்ப உலகுடன்
நீங்களும் இணையுங்கள்’
சமகால தகவல் தொழில்நுட்ப விழாக்குழு


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.